விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு+ II

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 26 புதன்கிழமை (09.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 052

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO



பொன் சேகாவை விடுவிக்கக் கோரி நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது...

## இலங்கை மீது குற்றம் சுமத்த ஐரோப்பிய நாடுகளிடம் உதவி!

### புலம்பெயர் தமிழர்கள் முயற்சிப்பதாக பிரதமர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றுவதற்காக புலம்பெயர் தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளின் உதவியைக் கோரியுள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார். நேற்று நாடாளுமன்றில் நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டும் என பிரதமர் டி.எம். ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

மக்களையும், அரச சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு அவசரகாலச் சட்டம் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது. இராஜதந்திரத் தகவல்கள் மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும்மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு கூடவுள்ளது. அதன்போது இலங்கை மீது யுத்தக் குற்றங்கள் சுமத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புலி ஆதரவுத் தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் இலங்கைக்கு எதிராக சூழ்ச்சித்திட்டங்களைத் தீட்டி வருகின்றன. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் முனைப் (16ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் பதிவு நடவடிக்கை சாதாரண விடயம் மட்டுமே

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)



வட பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையானது ஒரு சாதாரண விடயமாகும். அதை யாரும் தவறான நோக்கங்களுடன் பார்க்க வேண்டாம். இந்தப் பதிவு தொடர்பில் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உபய மெதவல தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

வடபகுதியில் நிலையான பாதுகாப்பை உறுதிப்படுத்த படையினர் கடுமையாகச் செயற்பட்டு வருகின்றனர். இதற்கமைய இப் பதிவுகள் பொதுமக்களிடம் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் பொதுமக்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை. அதேநேரம் கிராமசேவையாளர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஊடாகவே இப் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு சாதாரண நடவடிக்கையே என பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

மறுப்பு

இதேவேளை இராணுவத்தினர் பொதுமக்களிடம் பணம் வசூலித்து, குடும்பப் புகைப்படங்களைப் பிடிப்பதற்கு கட்டாயப்படுத்துவதாகவும், சிங்களத்திலுள்ள பல படிவங்களில் கையெழுத்திடுமாறு நிர்ப்பந்திப்பதாகவும் த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ள குற்றச்சாட்டையும் இராணுவப்பேச்சாளர் (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி கொழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகத் தேசிய முன்னணியின் தலைவருமான சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு நேற்று ஒரு வருடமாகிய நிலையில், அவரை விடுதலை செய்யுமாறு கோரி வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரிகட்சி, இன, மத (16ஆம் பக்கம் பார்க்க)

## தமது ஆசனங்களை மாற்றிய எம்.பிக்கள்

(கொழும்பு)

ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது ஆசனங்களை மாற்றிக் கொள்வதில் நேற்று முனைப்புக் காட்டியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடிய போது ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தத் தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமராது அடுத்தவர்களின் ஆசனங்களில் அமர்ந்தவாறு கூடிக் கதைத்துக் கொண்டிருந்துள்ளனர்.

அவரவர் இருக்கைகளில் சென்றமர்ந்து நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சபாநாயகர் பல தடவை வேண்டுகோள்விடுத்தும் அவர்கள் அதனைக்காதில் (16ஆம் பக்கம் பார்க்க)




## யாழ். குடாநாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு எதுவும் ஏற்படவில்லை!

### யாழ்.வணிகர் கழகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. பொருட்கள் போதியளவு இருப்பில் உள்ளன என யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரன் தெரிவித்தார்.

குடாநாட்டில் பொருட்களின் விலையேற்றம் தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டதை அடுத்து பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்று யாழ்.வணிகர் கழகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பல பாகங்களிலும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக குடாநாட்டில் பொருட்கள் விலையேறும் சாத்தியக்கூறு இருப்பதாக பேசப்படுகின்றது. ஆனால் அவ்வாறான நிலை எதுவும் இல்லை.

அரிசி வகைகள் அவற்றின் தரத்திற்கு ஏற்ப விற்பனை செய்யப்படும். குறிப்பாக நாட்டரிசி 60 ரூபாய் தொடக்கம் 85 ரூபாய் வரையும், சம்பா 75 ரூபாய் தொடக்கம் 90 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை சீனி மொத்த விலையில் 100 ரூபாயிற்கும் சில்லறை விலையில் 105 ரூபாயிற்கும் விற்கப்படும்.

அத்தோடு அரிசி விலை தொடர்பாக யாழ்.மாவட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டே யாழ்ப்பாணத்தில் பதிவு நடவடிக்கை

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற பதிவு நடவடிக்கைள் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் குடியிருப்பாளர்கள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப் (16ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனு நிராகரிப்பு 11ஆம் திகதி விசாரணை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட எட்டு ஆணை கோரும் மனுக்களை எதிர்வரும் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி எம்பிலிப்பிட்டிய, ஹோமாகம, பத்தேகம மற்றும் வெலிகந்த பிரதேச சபைகள் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


# மின்சாரம் இன்று தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

வேலைகள் முன்னதாக முடிபுற்றால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின் விநியோகம் வழங்கப்படலாம் எனவும் அவர் கூறினார். (ச)


**வர்த்தகப் பெருமக்களே....**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)


# உள்ளூராட்சித் தேர்தலின் போது அரசுக்கு சிறந்த பாடம் புகட்டுவோம்!

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் அரசுக்கு சிறந்த பாடம் புகட்ட ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய முக்கிய நபரான கே.பியை கைது செய்த அரசாங்கம் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவ்வாறு செய்யாது சுக போகங்களை வாரி வழங்கி வருவதுடன், மக்களை புலிகளிடமிருந்து காப்பாற்றிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்துள்ளது.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக 63ஆவது சுதந்திர தினத்தன்று ஐ.தே.க செய்த ஆர்ப்பாட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் மூலம் அரசாங்கம் எத்தகைய அடக்குமுறைகளை நாடு முழுவதும் கட்டவிழ்த்து விட்டுள்ளது என்பது மீண்டும் மீண்டும் தெளிவாகின்றது.

ஊடகவியலாளர் கொலைகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக இந்த அரசாங்கம் சாதாரண மற்றும் நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை.

ஊடகவியலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதாகவும், ஊடக நிறுவனங்களுக்கு உதவி புரிவதாகவும், ஊடக சுதந்திரத்தை நிலைநாட்டுவதாகவும் கூறிவரும் அரசு, சுதந்திர தினத்தன்றே ஊடகவியலாளர்களை தாக்கியதோடு உபகரணங்களையும் கொள்ளையடித்துள்ளது.

இந்த நிலையிலே எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்கு சிறந்த பாடம் புகட்ட ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாகவும் கருணாதிலக மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# 200 மீற்றருக்கு ஒருதடவை பதிவு

## பரு.வீதியால் பயணிப்போர் சிரமம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வல்லைச் சந்தி வரையுமான தூரத்தில் இரவு நேரத்தில் சுமார் 10இற்கும் மேற்பட்ட பகுதிகளில் இராணுவத்தினால் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட சில இடங்களில் 200 மீற்றருக்கு ஒன்று என்ற அடிப்படையில் வாகனப்பதிவு இடம் பெறுவதுடன் பயணிப்போர் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் கூறப்பட்டது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் வடமராட்சியை சேர்ந்த பணியாளர்கள் பணி முடிந்து இரவு நேரத்தில் வீடு திரும்பும் போது இச் சோதனை நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்து இராணுவத் தரப்பிடம் விளக்கமளித்த போதும், கொள்ளைச் சம்பவங்கள் யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறான சோதனை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதாக அவர் கூறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிரதான வீதிகளிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று இரவு நேர கடமையில் ஈடுபடும் மின்சார சபைப் பணியாளர்களும் சிரமப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. (எ)

# குற்றவாளிகள் போல் நடத்தப்படும் யாழ்ப்பாணத்திலுள்ள பொதுமக்கள்

## விநாயகமூர்த்தி எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணத்தில் மக்கள் குற்றவாளிகளைப் போல நடுத்தெருவில் நிறுத்தப்பட்டு படையினரால் புகைப்படம் எடுக்கப்படுகிறார்கள். இதனால் மக்கள் அச்சத்தில் வாழ்வதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கே.பிக்கு சுதந்திரமாக வாழ அரசாங்கம் இடமளிக்குமானால், சிறு குற்றங்கள் இழைத்தோரை ஏன் விடுதலை செய்ய முடியாது? ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், மகேஸ்வரன் ஆகியோர் அரச பயங்கரவாதிகளால் தான் கொல்லப்பட்டார்கள்.

மக்களுக்கு இன்று 3 வேளை உணவு உண்ண முடியவில்லை. ஆனால் அரசாங்கமோ அவசியமற்ற விழாக்களுக்கு கோடிக்கணக்கான பணத்தை செலவிடுகிறது. இவ்வாறான அடக்குமுறை தொடருமானால் எகிப்தில் ஏற்பட்ட நிலைதான் தோன்றும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கிலப் பாடநெறிக்கான நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆங்கில பாடநெறிக்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 25பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதிக் கடிதங்களை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பு பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கேட்டுள்ளார்.

ரி.ஜெனநந்தராஜன்-கோண்டாவில், ரி.தர்மிகா-புத்தூர், எஸ்.சுபேந்திரன் -இமயாணன் வடக்கு, என்.கேதீஸ்வரன் -பருத்தித்துறை, பி.பரம்சோதி-குப்பிளான், இ.ஜெபிகா-நல்லூர், கே.ராஜேந்திரன்-கந்தர்மடம், கே.கெங்காதரன்-யாழ்ப்பாணம், ரி.சுந்தரலிங்கம்-கொக்குவில், ஜி.கிருத்திகா-தாவடி, எஸ்.அனிஸ்ரன்-அளவெட்டி, ஜே.பிருந்தாபன்-தாவடி, கே.பரமேஸ்வரன்-கரவெட்டி, எஸ்.நிர்மலநாதன்-யாழ்ப்பாணம், வி.டன்சியா-மானிப்பாய், கே.கனகரத்தினம்-நீர்வேலி, ஆர்.ரவிச்சந்திரன்-இமயாணன், பி.சோமசுந்தரம்-குடத்தனை, எம்.ஆர்.ஏ.வலன்ரின்-இளவாலை, ஜி.சட்டநாதர்-திருநெல்வேலி, ரி.கோமதி-புலோலி மத்தி, எ.அருள்குமரன்-மண்டைதீவு, ரி.நிவேதா-நயினாதீவு, ஜே.நடராஜா-ஊரெழு, எஸ்.பத்மநாதன்-வண்ணார்பண்ணை. (ச)

## உதைபந்தாட்டப் போட்டி

கரவெட்டி கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வும் வருடாந்த உதைபந்தாட்ட இறுதி போட்டியும் கிறிஸ்தவ வாலிப சங்கத் தலைவர் வணபிதா தேவகுமார் தலைமையில் இன்று பி.ப. 3.00 மணிக்கு அல்வாய் நக்கீரன் விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் இறுதி பரிசளிப்பு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கட்டவேலி சேகரம் முதன்மை குரு வணபிதா கிறிஸ்ரிகுமார் தங்கராசா கலந்து கொள்ளவுள்ளார்.

முதலாவது அரை இறுதி உதைபந்தாட்ட போட்டியில் வதிரி பொம்மஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து, டைமன் விளையாட்டு கழகமும் மற்றொரு அரையிறுதி போட்டியில் உடுப்பிட்டி யூத் விளையாட்டு கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டு கழகம் மோதவுள்ளது. (ச-24)

## அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிப்பதற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான வாக்கெடுப்பு நேற்று நடத்தப்பட்டபோது அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கு ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (ச-5)

# மரண அறிவித்தல்

## அமரர் வடிவேல்-பவளம்



கரணவாய் கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேல் பவளம் அவர்கள் 08.02.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலுவின் அன்பு மனைவியும், ஞானப்பெருமாள் (ஓய்வுபெற்ற இலிகிதர்), தவராஜா (பிரதம இலிகிதர்), அமரர் சி.புஷ்பராணி (லண்டன்), விநாயகமூர்த்தி (கணனி விரிவுரையாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மாவதி, றெஜினா, சிவகாந்தி, கலாதாரணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஷ்யந்தி, கௌஷ்யந்தி, சிந்துஜன், டிலக்ஷன், டன்ஸ்ரிகா, சாஹித்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
வ.ஞானப்பெருமாள் (மகன்)
(இ)


SPECIAL OFFER
G.C.E. O/L School Leavers
பரீட்சைகளின் பின் தகவல் தொழில்நுட்ப கல்வியின் முதல்வனுடன் இணையுங்கள்
75% நேரடி ஸ்கொலர்சிப் விசேட சிறப்புச் சலுகை
25 YEARS
CSC COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION



நேரடி கட்டணச் சலுகை 28-02-2011 வரை மட்டுமே!
Pay 4900/- only
Certificate in MS Office Application
Certificate in Web Design & Development
Certificate in Desktop Publishing
Diploma in Mobile phone Service & Repair

Diploma Courses
* Information Technology
* IT & Web Programming
* PC Professional
* Graphic Design & DTP
* Macromedia Application
* Adv. Java Programming
* Office Automation
* Software Engineering
* Web Design & Development
* Digital Video Production
* Hardware & Networking
* Computer Applications
* Digital Pre-Press

சர்வதேச தர நிர்ணய கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கல்லூரி
ISO 9001 : 2000
மேலதிக விபரங்களுக்கு
ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
230, 1ம் மாடி கண்டி வீதி சாவகச்சேரி T.P :021-2270267
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399

# இன்று ஒரு தகவல்

## அறிவும் ஞானமும்

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ஒரேஒரு மகன் இருந்தான். அவனுக்கு விபரமே தெரியாது.

அவ்ன் ஒரு முட்டாள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் அவன் தான் அடுத்து ஆட்சிக்கு வரவேண்டியவன்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்கவேண்டிய ஒருத்தன் இப்படியிருப்பதால் எல்லோருக்கும் கவலை.

மன்னர் அமைச்சர்களைகூப்பிட்டு ஆலோசனைநடத்தினார்.

"இவனை இன்னொரு நாட்டுப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி பார்க்கலாம். அங்கே போய் படித்துவிட்டு நல்ல ஞானத்தோடு திரும்பி வரட்டும். அதன் பின் பார்த்துக் கொள்ளலாம்" என்று அவர்கள் ஆலோசனை கூறினார்கள்.

மன்னருக்கும் அது சரியென்றுபட்டது.மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

இவனும் போனான். அங்கு ஒரு பல்கலைக்கழகத்தில் சேர்ந்தான். நிறையப்படித்தான். அதன் பின் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினான்.

"தந்தையே, நான் நிறையப்படித்து விட்டேன். இனிமேல் நாடுதிரும்பலாம் என்று நினைக்கின்றேன்" என்று எழுதினார்.

மன்னருக்கு மிக்க மகிழ்ச்சி. மகன் படித்து விட்டான் என்ற ஆனந்தம். உடனே அவன் திரும்பி வருவதற்குரிய ஏற்பாடுகளை செய்தார்.

இளவரசன் நாடு திரும்பினான். அதை கொண்டாடுவதற்காக அரண்மனையில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். முக்கியமானவர்களெல்லாம் அதில் வந்து கலந்து கொண்டார்கள். அந்த விருந்துக்கு முனிவர் ஒருவரும் வந்திருந்தார்.

அவர் இளவரசரின் அருகில் போய் உட்கார்ந்து விசாரித்தார் "என்னப்பா... என்ன படித்திருக்கிறாய்?" என்றார்

"நிறையப் படித்து விட்டு வந்திருக்கிறேன்" என்றான்.

"என்னென்ன படித்தாய்" என்றார்?

எல்லாவற்றையும் விபரமாகச் சொன்னான்.

அவன் அப்படி சொல்லிக் கொண்டிருக்கும் போதே ... முனிவர்தன் மோதிரத்தை கழற்றி உள்ளங்கையில் வைத்து மூடினார். அப்படியே கையை நீட்டி அவனுக்கு முன் காட்டினார்.

இதற்குள் என்ன இருக்கிறது சொல் பார்க்கலாம் என்றார். இளவரசன் ஒரு கணம் யோசித்தான்.

அதன் பின் "உங்கள் கைக்குள் இருப்பது வட்டமான பொருள் நடுவில் துளையிருக்கும்" என்றான்.

முனிவர் திகைத்துப் போய்விட்டார்.

"பையன் பெரிய அறிவாளியாக ஆகிவிட்டான்" என்று நினைத்தார். அதன் பின் கேட்டார்.

சரி... என்கையில் நடுவில் துளையுள்ள வட்டமான பொருள் இருக்கிறது என்பதை சொல்லிவிட்டாய்.

அதன் பெயர் என்ன? அதைச் சொல் என்றார்.

இளவரசன் சிறிது நேரம் யேசித்தான்.

அதன்பின் சொன்னான். "முனிவரே,நான் படித்த விஞ்ஞானம் உங்களுக்கு பதில் சொல்ல உதவவில்லை. இருந்தாலும் பதில் சொல்கிறேன்... அது ஒரு வண்டிச் சக்கரம்" என்றான்.

இப்பொழுது முனிவர் யோசித்தாராம்.

முட்டாளை படிக்கவைக்கலாம். ஆனால் சிந்திக்கவைக்க முடியாது என்பதை அவர் புரிந்து கொண்டாராம்.

"தகவல் அறிவு ஞானமாகாது" என்கிறார் ஓஷோ.

ஏனெனில், தகவல்கள் மாறுதலை ஏற்படுத்துவதில்லை. ஆனால் ஞானம் என்பது மாறுதலால் உண்டாக்கக் கூடிய ஒன்று என்கிறார் அவர்.

மனம் சரியான வழிக்கு வரவேண் டும். அதன்பின் படிக்கும் கல்விதான் உண்மையான கல்வி.

"சரி, மனம் சரியாக வருவதற்கு என்னவழி? என்று கேட்டால், மனிதன் முழு மாறுதல் அடைவதற்கான வழிமுறை தியானம் தான் என்கிறார் அவர்.

அதனால் நிறைய படித்திருக்கிறேன் என்று சொல்பவனெல்லாம் ஞானம் உள்ளவன் என்று நினைத்து விடக் கூடாது.

ஒருத்தர் இன்னொரு பெரிய மனிதரை அழைத்துக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தினார்.

"சேர், நிறைய படித்திருக்கிறார். மூன்று எம்.ஏ வாங்கியிருக்கிறார். ஆனால் ஒன்று அவ்வப்போது கொஞ்சம் திருடுவார். அவ்வளவுதான்... மற்றபடி.. அவர் ஒரு பெரிய அறிவாளி தான்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சுற்றுலாப்பயணிகளின் அதிகரித்த வருகையால் யாழ்.மாவட்டத்தில் சுற்றுச் சூழல் பாதிப்பு

## பேராசிரியர் சிவச்சந்திரன் தெரிவிப்பு

சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகையால் யாழ். மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதிப்படைவதாக பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் சிந்தனைக் கூடத்தின் ஏற்பாட்டில் நல்லூர் தியாகிகள் அறக்கொடை நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்டத்தின் வளங்கள், பயன்பாடு அபிவிருத்தி வழிமுறைகள் பற்றிய இருநாள் செயலமர்வில் கலந்துகொண்டு வளங்களின் வரையறை, வகைப்பாடு மற்றும் அபிவிருத்தி என்பதன் பொருள் பற்றி உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

சுற்றுலாப் பயணிகளின் அதிகரித்த வருகையால் யாழ். மாவட்டத்தில் சுற்றுச்சூழலில் பாதிப்பு ஏற்படுகின்றது. குறிப்பாக நிலக்கீழ் நீர் மாசடையும் சூழ்நிலை அதிகரித்துள்ளது.

வீடுகளிலும் வீதிகளிலும் அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் தங்கியிருப்பதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக மனிதக்கழிவுகள் நிலக்கீழ் நீருடன் கலப்பதனால் குடிநீர் மாசடைந்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை அதனை சுற்றுலா பிரதேசமாக கருதமுடியாது. தரைக்கீழ் நீர் மேல் மட்டத்தில் காணப்படுவதால் மிக விரைவில் மாசடைந்து விடும் சூழ் நிலையுள்ளது.

மேலும் உலகத்திலேயே யாழ்ப்பாணம் சகல வளங்களையும் உள்ளடக்கிய பிரதேசமாகவுள்ளமையால் அதை பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் பல குளங்கள் மூடப்பட்டு விட்டன. ஆரம்பகாலத்தில் குளங்கள் அமைத்து மழைநீரை சேகரித்து வைப்பது சட்டமாக இருந்து வந்தது. அந்த நிலை தற்போது இல்லை.

இலங்கையில் வடமாகாணத்தில் தான் வளங்கள் அதிகமாகவுள்ளன.

குறிப்பாக காடுகளின் பரம்பல் இந்தப்பகுதியில் தான் அதிகமாக உள்ளது.

கல்வி, அபிவிருத்தி இரண்டும் இணைய வேண்டும். அப்போதுதான் வளங்கள் சரிவரப் பயன்படுத்தப்படும். விவசாயம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை போன்ற பல்வேறு துறைகளும் அபிவிருத்தியடைய வேண்டும்.

அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளும் போது மக்களுடன் பேசி அது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

தனிமனிதனால் அபிவிருத்தியை திருப்பதிகரமாக முன்னெடுக்க முடியாது. கூட்டாக சேர்ந்து அபிவிருத்திகளை முன்னெடுக்கும் போதே அது வெற்றியளிக்கும்.

கனடா போன்ற நாடுகள் ஏனைய நாடுகளில் உள்ளவர்களை அகதிகளாக உள்வாங்கக் காரணம் அங்குள்ள வளங்களை பயன்படுத்தவே.

வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்துவதன் மூலமே அபிவிருத்திப் பணிகளை துரிதகதியில் முன்னெடுக்க முடியும்.

வறுமையை போக்க வேண்டுமானால் வேலை வாய்ப்பினை அதிகரித்து சமவருமானமுடையவர்களாக அனைவரையும் மாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 280 | 290 |
| உருளைக்கிழங்கு | 45 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350 | 320 |
| தக்காளி | 110 | 160 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 120 | 110 |
| கரட் | 100 | 120 | 140 | 100 |
| பூசணி | 50 | 50 | 80 | 50 |
| புடோல் | 70 | 120 | 100 | 130 |
| வாழைக்காய் | 35-40 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200-300 | 100 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 120 | 85 |
| பாகற்காய் | 120-140 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 130 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | - | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | - | 300 | 250 | 290 |
| லீக்ஸ் | 120 | 150 | 200 | 150 |
| பீற்றூட் | - | 130 | 160 | 160 |
| கறிமிளகாய் | - | 250 | 300 | 270 |
| போஞ்சி | 120 | 240 | 250 | 230 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 240 | 280 |
| கீரை - 1 பிடி | 15-10 | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 70 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

## இராசி பலன்

*09.02.2011*
*(தை 26, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு*
*சஷ்டி முன்னிரவு 7.40மணிவரை*
*அச்சுவினி பின்னிரவு 5.13 மணிவரை*
*இராகுகாலம் 12.35-2.05 மணிவரை*
*சுபநேரம் 5.05-6.35 மணிவரை*
*சஷ்டி விரதம்*

**மேடம்** தெய்வ கடாட்சத்தால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்க பலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளை செய்தாலும் ஏதாவது குறைகேட்கும் சூழ்நிலை ஏற்படலாம், திடீர்பயணங்களால் அலைச்சலை ஏற்படுத்தும்.

**மிதுனம்** இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொலை தூரப்பயணம் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறலாம்.

**கடகம்** எதிர்கால முன்னேற்றம் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், பம்பரமாக சுழன்று பணி புரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், தந்தைவழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**கன்னி** சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபடவேண்டிய நாள், உத்தியோகத்தில் மேலதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, அலைச்சல் அதிகரிக்கும்.

**துலாம்** நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும், உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவர், உடன் பிறப்புக்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வர், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,மாமன் மைத்துனர் வழியில் அன்புத் தொல்லை ஏற்படலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல ஆலோசனை வழங்கலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலையில் அதிக முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வீண்பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, உடன்பிறப்புகளின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள்.

**மீனம்** தனவரவு திருப்திகரமாக அமையும், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள்.

வளவன்



யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களுக்கு நேற்று வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி துவிச்சக்கரவண்டிகள் மற்றும் காலணிகள் என்பவற்றை வழங்கினார். இந்நிகழ்வில் ஆளுநர், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் மாணவர்களுக்கு காலணிகள் வழங்குவதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

## மஹோற்சவம்

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி இமையாணன் அருள்மிகு துவாளி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெற்று எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை 10 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-10)

## யாழ்.செய்திகள்

## தையல் பயிற்சிநெறி தொடர்பான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்/புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தையல் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வருகை தருமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் வலிகாம கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி ச.சிவசக்திதேவி மேற்படி பயிற்சி தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளார்.

இப்பயிற்சி நெறிக்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் அன்றைய தினம் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப் பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 9 மணிதொடக்கம் 11 மணி வரை இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறையிலும், காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30மணி வரை விபுலானந்தர் வீதி கொழும்புத்துறையிலும் வைத்து வழங்கப் படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற் படி தடுப் பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# யாழ்ப்பாணம் தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி நிலையம் விரைவில் இடமாற்றம்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி நிலையம் விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித் துள்ளார்.

தொல்பொருள் திணைக்கள ஆராய்ச்சி நிலையத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொல்பொருள் திணைக்களத்தினை இடமாற்றம் செய்வதனால் சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகை தரும் வாய்ப்புள்ளது.

மேற்படி தொல்பொருட் திணைக்களத்தின் தற்போதைய அமைவிடமானது போதியளவு சுற்றுலாப்பயணிகளின் வருகைக்கு உகந்ததாக அமையாத காரணத்தினாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# சாதாரண தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய வியாபார முகாமை நிறுவனத்தின் அனுசரணையுடன், கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் க.பொ.த. (சாதாரணதரம்) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான "கற்றலுக்கும் தொழிலுக்குமான வழிகாட்டல்" கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை பாடசாலையின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இக் கருத்தரங்கில் தேசிய வியாபார முகாமை நிறுவன விரிவுரையாளர்கள், தொழில்நுட்பக் கல்லூரி வழிகாட்டல் பிரிவினர், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களை எடுத்துரைக்கவுள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை எழுதி உயர் தரம் கற்கவுள்ளவர்கள் மற்றும் அனுமதி கிடைக்காத மாணவர்கள் அனைவரும் இக் கருத்தரங்கில் பங்கேற்கலாம்.

அத்துடன் இவர்கள் தமது பெற்றோருடன் சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலை மாணவரிடையே மாலைகட்டல், கோலம்போடுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி சத்தியம்மன் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் மாலைகட்டுதல் தரம் 6,7 ஆகிய மாணவர்களுக்கும் தோரணம் பின்னுதல் தரம் 8,9 மாணவர்களுக்கும் கோலம் போடுதல் தரம்12,13 மாணவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

ஒரு பாடசாலையில் ஒவ்வொரு தரத்தில் இருந்தும் ஒரு மாணவர் வீதம் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்குத் தேவையான பொருட்களை போட்டியாளர்களே எடுத்துவரவேண்டும் என்றும் மாலைகட்டுவதற்கு வாழைநார் பிரயோகப்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புகைப்படம் பிடிக்கவிரும்புபவர்கள் 50 ரூபா வீதம் செலுத்தி புகைப்படம் பிடித்துக் கொள்ளலாம் என்றும் சம்பந்தப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களை உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# புதிய நிர்வாகசபைதெரிவு

(யாழ்ப்பாணம்)

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் அண்மையில் நடைபெற்ற மகா சபைக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக காளிராசாதர் மகுலசிங்கம், உப தலைவராக தில்லையம்பலம் ஜெயராஜ், செயலாளராக க.விமலதர்ஸ், உப செயலாளராக சி.குலசேகரம், பொருளாளராக ந.குணராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் தர்மகத்தா சபை உறுப்பினர்களாக கோ.சிவகணேஸ், க.முரளி, இ.மதியழகன், ச.ரவிச்சந்திரன், சு.சுகந்தன், கோ.கோபிநாத், மா.குமாரவேல், ச.அமரதீபன், இ.புஸ்பராசா, ச.பிரதீபன் ஆகியோரும் கணக்காய்வாளராக தி.கனகசபாபதிப்பிள்ளை, சு.ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## மெய்வல்லுநர் போட்டி

(கரவெட்டி)

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 12ஆம்திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி எல். என். ஜோசப் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத் துவப் பதிவாளரும் பாடசாலையின் பழைய மாணவியுமான திருமதி பானு பிரசன்னா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-24)

✠✠✠

சுழிபுரம் யாழ்.விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் ஒருமணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் வி.ஸ்ரீகாந்தன் தலை மையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். கைலாசநாதன், வட்டு. இந்துக்கல்லூரி ஆசிரியர் திருமதி பவானி கைலாசநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, கௌரவ விருந்தினராக விக்ரோறியாக் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி சுதந்திரதேவி தங்கராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (ஸ்ரீ-2)

✠✠✠

யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீலங்கா சைல்ட்பண்ட் செயற்றிட்ட அதிகாரி ரி. பகீதராஜ், வலி.கிழக்கு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி ஏ.கனகராசா, முள்ளியவளை றோ.க.த.க. பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.அரிராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3)

✠✠✠

(யாழ்ப்பாணம்)


யா/ புன்னாலைக்கட்டுவன் மகா வித்தி யாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ச.சிவசக்திதேவி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக புன்னாலைக் கட்டுவன் வடக்கு கிராம சேவகர் சோ.பரமநாதன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலைய செயலாளர் இ.கெங்காதரன், ஓய்வுபெற்ற அதிபர் க. ஆனந்தராசா, சுன்னாகம் பனை தென்னை அபிவிருத்தி சபை தலைவர் க.மெய்யழகன், கௌரவ விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் ஆகி யோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3)

# இணைந்த வடக்கு, கிழக்கு ராஜீவ் தீர்மானத்தையும் கைவிட்டது காங்கிரஸ்

புகழேந்தி தங்கராஜ்



அடிப்பவனுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்து விட்டு, அடிபட்டவனுக்கு உணவுப் பொட்டலம் போடுகிற நாடு உலகத்திலேயே அமெரிக்கா மட்டும்தான் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரிடமும் தவறாமல் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டியிருக்கிறது.


எந்தையும் தாயும் மகிழ்ந்தோ மகிழாமலோ குலாவியோ உலாவியோ இருந்த உங்கள் இந்தியா மட்டும் என்ன கிழிக்கிறது?" அடி அடி என்று இலங்கைக்கு ஆயுதங்களை வாரிவழங்கி விட்டு, நசுங்கியிருக்கிற தமிழர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கப் போவதாக சலங்கை கட்டிக்கொண்டு ஆடுகிறதே... இதற்கு என்ன அர்த்தம்?

தங்கள் சொந்தமண்ணில், தாங்கள் ஆண்ட மண்ணில் சிங்களவருக்கு முன்பே வாழ்ந்த மண்ணில் உரிமை கேட்டுப் போராடியவர்கள், மானம் மரியாதையோடு வாழ்ந்த ஈழத்துச் சொந்தங்கள். பெரியார் திடல் மனேஜர்கள் மாதிரியோ, அறிவாலயத்து டேமேஜர்கள் மாதிரியோ டம்மி புலிகள் இல்லை அவர்கள். எந்த அவமானத்தையும் தாங்கிக்கொள்ளாமல் சுயமரியாதையோடு போராடிய நிஜப் புலிகள். நண்பன் இலங்கையோடு சேர்ந்து நேரடியாகவே அவர்களை நசுக்க முயன்று இதே இந்தியா மூக்குடைபட்டது உண்மையா இல்லையா என்று கோபாலபுரத்துக்கு (முதல்வர் கருணாநிதி இல்லம்) ஒரு கடுதாசி எழுதிப்பாருங்கள். 'அந்தக் கூலிப்படையை வரவேற்கச் செல்லாத மாவீரன் நான்' என்று, காங்கிரஸோடு உறவு முறிந்த மறுநாளே உங்களுக்கு பதில் வராவிட்டால் நான் எழுதுவதையே நிறுத்திவிடுகிறேன்.

உண்மையில் விடுதலைப் புலிகளிடம் தோல்விகண்டு அவமானத்தோடு திரும்பியது இந்திய இராணுவம் அல்ல... ராஜீவ் காந்தியின் பக்குவமற்ற பரிதாபகரமான ராஜதந்திரம். ராஜீவ் காந்தி என்கிற மாஜி பைலட், தனது அறியாமையின் காரணமாக, திட்டமிட்டு தம்மைத் தவறாக வழி நடத்திய அசட்டு அம்பிகளை நம்பிக் கெட்ட வரலாறு அது. தேசப்பற்று ஒன்றே ஒக்சிஜனாக இருக்கும் வெள்ளிப் பனிமலைகளின் மீது நின்று எல்லை காக்கப் போராடும் ஈடு இணையற்ற இந்திய வீரர்களுக்கு 'கூலிப்படை' என்கிற வில்லையைக் கட்டி, விபரீத விளையாட்டில் ஈடுபடுத்தினார்கள் அவர்கள். தேசம் காக்கும் எங்கள் வீரர்களைக் கூலிப்படை ரேஞ்சுக்குக் கொண்டுசெல்லாதே என்று குரல் எழுப்பக்கூட துணிவின்றி மௌனம் சாதித்தது நாடு. ராஜீவ் காந்தி என்கிற ஒரு அரசியல்வாதியின் தவறான முடிவுக்கு, ஆயிரமாயிரம் இந்திய வீரர்கள் விலை கொடுக்க வேண்டியிருந்தது.

'ராஜீவ்-ஜெயவர்தனா ஒப்பந்தத்தால் இந்தியாவுக்கும் பலனில்லை, பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கும் பலனில்லை. வேறு யாருக்காக இந்த ஒப்பந்தம் போடப்படுகிறது' என்று பீல்ட்மார்ஷல் மானெக் ஷா போன்றவர்கள் கேட்டது ராஜீவின் காதில் விழவில்லை. ஜெயவர்தனா என்கிற பழுத்த தந்திரமான அரசியல் வாதியின் சத்தம் மட்டும் தான் அவரது காதில் விழுந்தது. தனித்த பண்புகளும் அடையாளங்களும் உள்ள ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க, பாரம்பரியம் மிக்க தன் இராணுவத்தை இரவல் கொடுக்கப்போய், வட்டியும் முதலுமாக வாங்கிக் கட்டிக்கொண்டது இளிச்சவாய் இந்தியா. சொந்தச் செலவில் சூனியம் வைத்துக்கொள்வது என்று சொல்லாமல் இதை வேறெப்படித்தான் விவரிப்பது!

இன்று இதைச் சொல்லும்போது காங்கிரஸ்காரர்களுக்குக் கோபம் வரலாம். ஆனால், ஒரு லட்சம் தமிழர்களைக் கொல்லத் துணை நின்ற குற்றத்துக்காக காங்கிரஸை நாம் விரட்டி விரட்டி அடிக்கும்போது, தோசையை அப்படியே திருப்பிப் போடுவார்கள்... இலங்கைப் பிரச்சினையில் காங்கிரஸ் தவறான முடிவுகளை எடுத்ததற்கு



காங்கிரஸ் கட்சி எந்த விதத்திலும் காரணமல்ல என்பார்கள்.

இதெல்லாம் கற்பனையல்ல. காங்கிரஸின் எதிர்காலத் தலைவராக 1975ல் முன்நிறுத்தப்பட்டவர், ராஜீவின் தம்பி சஞ்சய் காந்தி . (அப்போதெல்லாம் விமானத்தை விட்டால் சோனியா, சோனியாவை விட்டால் விமானம் என்பதுதான் ராஜீவின் வாழ்க்கையாக இருந்தது) அன்று, அடுத்த தலைவராக முன்நிறுத்தப்பட்ட சஞ்சய் காந்தியின் முன் காங்கிரஸின் மூத்த தலைவர்களெல்லாம் கைகட்டி வாய்பொத்தி நின்றார்கள். இன்று, அதே சஞ்சய் காந்திதான் நெருக்கடி நிலை கால தவறுகளுக்குக் காரணம் என்று கூசாமல் அறிவிக்கிறது காங்கிரஸ். இன்னும் சில ஆண்டுகளில், இலங்கைப் பிரச்சினையில் எடுத்த தவறான முடிவுகளுக்கு ராஜீவ்தான் காரணம் என்று அறிவிக்காமலா போய்விடப் போகிறது காங்கிரஸ்! சஞ்சய் காந்தியின் நிலை ராஜீவுக்கு வராமல் போய்விடப் போகிறதா என்ன?

அன்று ராஜீவ் காந்தி என்கிற விபரமில்லாத திடீர்த் தலைவர் செய்த இமாலயத் தவறுக்கான விலையை, தமிழினம் இன்றுவரை கொடுத்துக் கொண்டிருக்கிறது. ராஜீவ் காந்தி எங்கள் மரியாதைக்குரிய தலைவர் என்று இன்றைக்குக் கடிதம் எழுதும் நமது பழைய நண்பர்கள் மறந்துவிடக் கூடாது என்பதற்காகவாவது இதையெல்லாம் நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. வணக்கம், வந்தனம், நமஸ்தே, நமஸ்கார், பான்ஜுஊர் என்றெல்லாம் ஆரம்பித்து சோனியாகாந்திக்கு நண்பர்கள் கடிதம் எழுதட்டும்... ராஜீவ் காந்தியை மலர்மாலையோ வேறு மாலையோ போட்டு அவர்கள் மதிக்கட்டும். அவர்களுடைய தனிப்பட்ட வியாபாரத்தில் நாம் தலையிடப் போவதில்லை அதே சமயம், நாடாளுமன்ற உறுப்பினராக ஆகிவிட்டதால் வரலாற்றை மாற்றி எழுதிவிட முடியும் என்கிற அவர்களது அசட்டு நம்பிக்கைகளை நாம் அங்கீகரிக்கப் போவதுமில்லை.

நண்பர்களே இப்படியென்றால், பார்டரில் பாஸ் செய்து பாராளுமன்றத்துக்குள் போனவர்கள் சும்மா இருப்பார்களா? 1991 மே 21ம் திகதிக்கு முன் விடுதலைப் புலிகளுக்கும் காங்கிரஸுக்கும் எந்த விரோதமும் இல்லையாம்! போகிற இடமெல்லாம் இப்படி கயிறு திரித்துக் கொண்டிருக்கிறார் சிவகங்கை சிதம்பரம். 1987 செப்டம்பரிலேயே பிரபாகரனைக் கொல்லச் சொல்லி டெல்லியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு உத்தரவு போனதே... 1991 இற்குப் பின்னர்தான் பிரபாகரனுடன் விரோதம் என்றால், 1987ல் அவரைக் கொல்லச் சொன்னது அளவுக்கதிகமான பாசத்தாலா? உள்துறைக்கும் உளவுத்துறைக்கும்தான் வெளிச்சம்!

தமிழர்களை எவ்வளவுதான் கேவலமாக நினைத்தாலும், ஒரே ஒரு தீர்மானத்தை மட்டுமாவது இவ்வளவு காலமாக உருப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருந்தது காங்கிரஸ். ராஜீவ் சொன்னதைப் போல் இலங்கையில் தமிழர் பகுதிகளான வடக்கையும் கிழக்கையும் ஒரே மாகாணமாக இணைக்க வேண்டும். என்பதுதான் அந்த தீர்மானம். இந்தமாதம் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் அந்தத் தீர்மானத்தையும் காணோம். இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனம் கோணுகிறமாதிரி நடந்து கொள்ளலாமோ...

சோனியாவைக் குறை சொல்வதில் அர்த்தமில்லை. இத்தாலி, ரோம், பிரான்ஸ், ஜேர்மன் பற்றித் தெரிந்து வைத்திருக்கும் அளவுக்கு, ஈழத்தைப் பற்றியும் இலங்கையைப் பற்றியும் தமிழ்நாட்டைப் பற்றியும் அவர் தெரிந்து வைத்திருக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயமுமில்லை. என்றாலும், தமிழ்நாட்டில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியைக் கொண்டுவரப் போவதாக அதிரடியாக அறிவித்துக் கொண்டிருக்கிற ராகுல் காந்தியிடம் கேட்கவேண்டிய கேள்விகள் நிறைய இருக்கின்றன.

ராஜீவ் மகன் ராகுலுக்கும், சித்தப்பா சஞ்சய் காந்திக்கும் நிறைய ஒற்றுமைகள். மூத்த தலைவர்களை அவமதிப்பதிலும் இளைஞர் காங்கிரஸ்தான் காங்கிரஸ் என்கிற தோற்றத்தை உருவாக்குவதிலும் அச்சு அசலாக சித்தப்பாவோடு அப்படியே பொருந்துகிறார் ராகுல். சஞ்சய் காந்தியைப் பார்த்து பயந்து நடுங்கியமாதிரி, ராகுலைப் பார்த்தும் நடுங்குகிறார்கள் காங்கிரஸ் பெருந்தலைகள். தறுதலைகளெல்லாம் பெருந்தலைகள் ஆகிவிட்ட ஒரு இயக்கத்தில் இதுதான் நடக்கும் அதனால்தான், ராகுலுக்கு தேசிய அரசியலைப் பற்றிப் பேச என்ன தகுதி இருக்கிறது, தேசத்தின் தலைவராகப் பெரிதுபடுத்திக் காட்டப்படும் அளவுக்கு அவர் என்ன தியாகம் செய்திருக்கிறார்... என்கிற குமைச்சலெல்லாம் இருந்தாலும் அதை மறைத்தபடி மரியாதை காட்டுகிறார்கள் காங்கிரஸில் இருக்கிற பொம்மைகள். ராகுல் சொல்வதெல்லாம் வேதவாக்காக மாறிவிடுகிறது.

கடந்த டிசம்பர் இறுதியில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த ராகுல், சென்னையில் அறிவுஜீவிகள் சிலரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். அறிவுஜீவிகளா, அப்படி யென்றால் யார் என்று கேட்பவர்களுக்கு முதலில் பதில் சொல்லி விடுகிறேன். திபெத், பாலஸ்தீனம், கிழக்கு திமோர், வட அயர்லாந்து, எரித்திரியா போன்ற நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை யெல்லாம் அங்கீகரித்துவிட்டு, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க எவரெல்லாம் மறுக்



கிறாரோ அவரெல்லாம் இங்கே அறிவுஜீவி. உணர்ச்சி வசப்பட மாட்டார்களாம்... அறிவு சார்ந்தே யோசிப்பார்களாம்...! கேட்பதற்கு நன்றாகத் தான் இருக்கிறது. தங்கள் குடும்பத்து பெண்பிள்ளை யாராவது இசைப்பிரியா மாதிரி கதறக்கதறக் கற்பழித்துக் கொல்லப்பட்டால் இந்த அறிவுஜீவிகள் உணர்ச்சி வசப்படாமல், பொறுமையையும் அமைதியையும் போதித்துக் கொண்டிருப்பார்கள் என்றா நினைக்கிறீர்கள்?

இங்கே, சமூகப் பொறுப்பும் போர்க்குணமும் இல்லாதவர்களே அறிவுஜீவிகள் என்றாகிவிட்டது. அறிவுஜீவிகளின் இலக்கணம் தலைக்கனம் தான் என்கிற மூட நம்பிக்கை வேறு.

இதனால் தான், சிறையில் இருக்கிற சீனத்து அறிவுஜீவிக்கு நோபல் பரிசு கொடுத்துவிட்டு அவரது உறவினர்களாவது வந்து வாங்கிக் கொள்வார்களா என்று காத்துக்கிடந்தது நோபல் பரிசு தேர்வுக்குழு ராகுல் காந்தி வரமாட்டாரா என்று வழிமேல் விழிவைத்து கன்னிமாரா ஹோட்டலில் காத்திருந்தது இங்கேயுள்ள அறிவுஜீவிகள் குழு.

நாளைக்கு ராகுல் பிரதமராகிவிட்டால்? அதனாலேயே அவரைச்சந்திக்க கிடைத்த வாய்ப்பை தங்களது பொன்னான தருணங்களில் ஒன்றாகக் கருதி, காத்துக்கிடந்து பார்த்தார்கள் தமிழக அறிவுஜீவிகள். அவர்களில் உண்மையான மனிதர்களும் இல்லாமல் இல்லை என்பதுதான் ஒரே ஆறுதல். அந்த மனிதர்களில் ஒருவர், 'இனப்படுகொலை செய்த ராஜபக்ஷவை கொமன்வெல்த் விளையாட்டு விழாவிற்கு அழைத்தது நியாயமா' என்று நேரடியாகக் கேள்வி கேட்க, அலட்டிக்கொள்ளாமல் ராகுல் அதற்கு அழித்தபதில் ராஜபக்ஷவை நான் அழைக்கவில்லை என்பது தான்.

(தொடரும்)

நன்றி:இணையம்

## வாழும் கலை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

எப்போதும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழ சுதர்சனக்கிரியா, மூச்சுப் பயிற்சி, யோகா, தியானம் என்பவற்றை உள்ளடக்கிய வாழும் கலைப்பயிற்சி நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 13 ஆம்திகதி வரை 3 பிரிவுகளாக நல்லூர்க் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்புவோர் யாழ். வாழும் கலை நிறுவனத்துடன் 0770474757 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ)

# நிபுணர்குழுவிடம் சாட்சியம் பெறும் நோக்கில் நியூயோர்க் விஜயம் செய்யும் எண்ணமில்லை

## நல்லிணக்க ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஆலோசனை பெறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்குழுவிடம் சாட்சியங்களைப் பெறும் நோக்கில் கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு நியூயோர்க் நகருக்கு விஜயம் செய்யாது.

அவ்வாறான நோக்கம் இல்லை என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக அதிகாரி லக்ஸ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் இலங்கை விஜயம் மற்றும் அந்தக் குழுவிடம் சாட்சியங்களைப் பெறும் செயற்பாடுகள் தொடர்பில் வெளிவருகின்ற தகவல்கள் தொடர்பில் தகவல் வெளியிடுகையிலேயே லக்ஸ்மன் விக்கிரமசிங்க மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவினர் வேண்டுமானால் இலங்கைக்கு விஜயம் செய்து எமது ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கலாம்.

அதாவது, இலங்கையில் நியமிக்கப்பட்டுள்ள கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப ஐ.நா.வின் குழு சாட்சியமளிக்கலாம். ஆனால், ஐ.நா. நிபுணர்குழுவிடம் சாட்சியங்களைப் பெறும் நோக்கில் அமெரிக்காவின் நியூயோர் நகருக்கு விஜயம் செய்யும் எண்ணம் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு இல்லை என்பதனைத் தெரிவிக்க வேண்டும்.

மேலும், செய்மதி ஊடாக ஐ.நா.வின் நிபுணர்குழு இலங்கையில் உள்ள நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு சாட்சியமளிக்கப்போவதாக தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் எங்களுக்கு எதுவும் தெரியாது. கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவானது தற்போது பொது அமர்வுகளை நிறுத்தியுள்ளதுடன் இதுவரைகிடைக்கப்பெற்ற சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளது என்றார்.

இதேவேளை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழுவானது செய்மதி மாநாட்டின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் இலங்கைக்கு எந்த விஜயத்தை யும் மேற்கொள்வதற்கு பதிலாக இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## இலங்கைக்கான கடனுதவியின் போது

# மனித உரிமை விடயங்களை பொருட்படுத்துவதில்லை

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான கடனுதவிகளை வழங்கும்போது மனித உரிமை போன்ற விடயங்களைப் பொருட்படுத்துவதில்லை என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை போன்ற விடயங்கள் அரசியலுடன் தொடர்புபட்டவை என்று சுட்டிக்காட்டிய அவர், அதன் காரணமாக கடனுதவிகளை வழங்கும்போது இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை கவனத்திற்கொள்வதில்லை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாணயத்தின் எதிர்பார்ப்பு நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுதான் என்று குறிப்பிட்டுள்ள அவர், அதன் அடிப்படையிலேயே கடனுதவிகள் தீர்மானிக்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை வரவு-செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையை மட்டுப்படுத்திக் கொள்வது மட்டுமே நாணய நிதியத்தின் எதிர்பார்ப்பாகும் என்றும் அவர் குறிப்பிடுகிறார். (ஸ்ரீ-2)

# ஐ.ம.சு.மு. ஆதரவு குழுக்களுக்கு இடையிலான மோதலில் ஐவர் காயம்

(கொழும்பு)

பெந்தோட்டையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவுக் குழுக்கள் இரண்டிற்கிடையில் ஏற்பட்ட மோதலில் இப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் உட்பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்த மோதலைத் தூண்டியவரெனக் கூறப்படும் குறித்த பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஜக்சன் கொட்டகச்சி பொலிஸாரின் பாதுகாப்புடன் பெந்தோட்டை வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளரான கஜன் சிறிமன்ன மற்றும் 4 ஆதரவாளர்கள் படுகாயமடைந்துள்ள நிலையில் களுத்துறையிலுள்ள நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் பெந்தோட்டைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஜக்சன் கொட்டகச்சியின் சகோதரர்கள் ஆவர். (ஸ்ரீ-2)

# நிபுணர் குழுவின் இலங்கை விஜயம் குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தை

## ஐ.நா.வின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து அர சாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவினை இலங்கைக்கு அனுப்பிவைப்பது குறித்தான ஏற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் பேசப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழுவின் பணிகளை தொடர்வதற்கு இலங்கை விஜயம் மிகவும் இன்றியமையாதது அல்ல என ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் மார்டின் நெசர்கீ தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், நிபுணர்குழு உறுப்பினர்கள் இலங்கை விஜயம் மற்றும் பயண ஏற்பாடுகள் குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



வீதி அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டு வந்த யாழ். மாநகர சபைக்கு சொந்தமான ரோலர் இயந்திரத்தின் ஒரு பக்க சில் திடீரென நடு வீதியில் விலகியதால் போக்குவரத்து பல மணிநேரம் தடைப்பட்டது. இச்சம்பவம் நேற்று முன்தினம் யாழ். நாவலர் வீதியில் இடம்பெற்றுள்ளது. (படம்:- எஸ்.கரன்)

# கடற்படை தாக்குதல் நடத்தவில்லை; செய்மதி படங்களுடன் விளக்கிய பீரிஸ்

(கொழும்பு)

இந்திய மீனவர்களுக்கு எதிராக இலங்கை பாதுகாப்பு தரப்பினரால் தாக்குதல் நடத்தப்படுவது தொடர்பில் இந்தியா இலங்கை மீது மீண்டும் வலியுறுத்தலை விடுத்துள்ளது.

பூட்டானில் நடைபெற்ற வெளிநாட்டு அமைச்சர்களின் சந்திப்பின் பின்னர் நேற்று முன்தினம் வெளிநாட்டு அமைச்சர்களான எஸ். எம். கிருஷ்ணா மற்றும் ஜீ.எல். பீரிஸ் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இதன் போது இது தொடர்பில் எஸ்.எம். கிருஷ்ணாவினால் இந்த வலியுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளதாக த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தாக்கப்படுகின்றமை தொடர்பில் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் குறித்து இந்திய அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளதுடன் இது தொடர்பில் கூட்டு நடவடிக்கை எடுக்கவும் இணங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த தாக்குதல்களை இலங்கை கடற்படையினர் மேற்கொள்ளவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகின்ற நேரத்தில் செய்மதி ஊடாக எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் அதற்கு ஆதாரமாக காட்டியுள்ளதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துவெளியிட்ட அமைச்சர்ஜீ.எல்.பீரிஸ், இது தொடர்பில் நிலையான பொறி முறை ஒன்றை கையாள நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மீனவர்கள் மீதான தாக்குதலை தடுக்க கூட்டு கண்காணிப்பு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாட்டு கடற்படையினரும் இணைந்து ரோந்துப் பணிகளில் ஈடுபடுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்திய ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி இந்த யோசனைத் திட்டம் குறித்து கவனம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.


தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் படுகொலைகள் கண்டிக்கப்பட வேண்டியது என்றும் மாநில சட்ட சபையின் காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்சு தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல்களினால் 378 இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இரண்டு நாடுகளினதும் கடற்படையினர் கூட்டாக இணைந்து பாதுகாப்பு ரோந்துப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் மீனவர் பிரச்சினைக்கு உரிய தீர்வினை வழங்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கள்ளிக்காட்டு இதிகாசம்

35



கவிப்பேரரசு வைரமுத்து

"இப்படியாகிப்போச்சே எம்பொழப்பு. வந்தவன் போனவனெல்லாம் என் நெஞ்சில வளச்சு வளச்சுக் குத்துறானே. மகன் என்னடான்னா ஆத்தாளக் கொண்டுபுட்டு ஒரு பொம்பளய ஆசைக்கு வச்சிருக்கேங்கிறான். மருமகன் என்னடான்னா ஒத்தாசைக்கு வச்சிருக்கியா ஒரு பொம்பளையன்னு உள்காயம் படுறமாதிரி அடிச்சிட்டுப் போறான். அழகம்மா, அடி ஆத்தா! நீ இருந்திருந்தா எனக்கிந்த ஏச்சும் பேச்சும் வந்திருக்குமா?"

முன்னிரவில் வேலையெல்லாம் முடித்துவிட்டு, அவருக்குப் பிடித்த கம்பங்களியையும் கத்திரிக்காய்க் குழம்பையும் கூடத் தள்ளிவைத்துவிட்டு அந்த ரெண்டு பயகளும் சொன்ன வார்த்தைகள் விலாவை அறுக்க வேதனையோடு இருந்த பேயத்தேவருக்கு அழகம்மாளிடம் ஒப்புச் சொல்லி ஓவென்று அழவேண்டும் போலிருந்தது.

குடல் தொங்கிச் சரிந்துகிடந்த கயிற்றுக் கட்டிலில் கிழிந்த சமுக்காளம் விரித்து, அழகம்மா இறந்த நாள் முதலாய் அவரது தலைக்கு வைத்துப் படுக்கும் அவள் புடவையைத் தேடினார். அது 'வச்ச' இடத்தில் இல்லை.

"இங்கதான வச்சேன்..." பரணில் தேடினார்; பாயைத் தூக்கித் தேடினார். கொடியில் தேடினார். இருங்கச் சோள மூட்டைகளைப் புரட்டித் தேடினார். காணல. பச்சத் தண்ணிதான்... இருந்தாலும் ஆத்திக் குடிச்சிருவோம் என்பது போல விரித்த சமுக்காளத்தைப் பிரித்துப் போட்டும் தேடினார். இல்ல; அது எங்கயும் இல்ல.

"ஏ! முருகாயி... எங்கம்மா சீல?

"எந்தச் சீல...?'

"அதான்... அழ்கம்மா சீல! எங்கயாச்சும் எடுத்து வெச்சிருக்கியா?"

"தலைக்கு வச்சுப் படுப்பீகளே அந்தச் சீலதான! ஆத்தா அழகம்மா கடைசியில கட்ன சீல... பச்சச் சீல...?"

"அதேன்! அதேன்! அந்தச் சீலதேன்..."

"கொள்ளநாளாச்சா... ஒரு வீச்சமெடுத்துச்சு. இன்னிக்கி அழுக்கெடுக்கத் தங்கையா பொண்டாட்டி வந்தாள்ல... சலவைக்குப் போட்டுவிட்டேன்."

"யாத்தே! என் குடியைக் கெடுத்துப்புட்டாளே!" சத்தம் போட்டுக் கத்தினார் பேயத்தேவர்.

முருகாயி நெஞ்சிலடித்துப் பதறி ஓரடி பின் வாங்கினாள்.

"வீச்சமெடுத்துருச்சா...? வீச்சமா அது...? அழகம்மா ஆவியடியம்மா அது. ஏங்கூட அது பேசும்... அது கூட நான் பேசுவேன். ராசாவுக்குக் கிரீடம் மாதிரிடியம்மா ஏந்தலைக்கு அவ சீல அத அடிச்சுத் தொவைச்சா அதுல ஒட்டியிருந்த அவ வாசம் போயிருமே. இப்ப அது அழுக்குல கெடக்கோ... இல்ல கம்மாயில தொவைச்சுக் காயக் கெடக்கோ? ஏஞ்சாமி நல்லசாமியாயிருந்தா அது தொவைச்சிருக்கப் படாது. இந்தா வாரேன்."

கயிற்றுக் கட்டிலில் கிடந்த சமுக்காளத்தை உதறி எடுத்துப் போத்திக் கொண்டு ஓடினார் பேயத்தேவர்.

ஊர்க்கோடியில் ஓரமாயிருந்த தங்கையா வீடு இப்போது தூரமாய்த் தெரிந்தது பேயத்தேவருக்கு.

ஊர் அடங்கிப்போன அந்த முன்னிரவில் திண்ணையில் தென்னங்கிடுகு விரித்து ரெண்டுகையை ஒண்ணுகூட்டித் தலைக்குவைத்துப் படுத்திருந்த தங்கையா பேயத்தேவரைக் கண்டதும் 'யப்பே!' என்று பயந்து பதறி எழுந்தான்.

"இன்னைக்கு எடுத்த அழுக்கெல்லாம் எங்கப்பா?"

"வெள்ளாவியில வெந்துகிட்டிருக்கப்பா!"

"போச்சப்பா... எம் பொழப்பு போச்சப்பா" என்று புலம்பிய பேயத்தேவர் "வா போகலாம்!" என்று லாந்தரை எடுத்துக் கொண்டு அவனை இழுத்துக் கொண்டு கம்மாக்கரைக்கு ஓடினார்.

ஊருக்குள்ள ஏதோ ஒரு நாய் எட்டுக்கடையில் ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

ஊருக்குத் தெக்க ரொம்ப தூரம் கம்மாக்கர; இருட்டு வேற. பாதையும் சிக்கலான பாதை. கையில ஒரு லாந்தரையும் புடிச்சு விசுக்கு விசுக்குன்னு நடந்தாக பேயத்தேவரும் தங்கையாவும். நெஞ்சில அடிச்சு ஆளப்பின்னுக்குத் தள்ளுது பேய்க்காத்து.

"வெரசா நடப்பா..."

பேயத்தேவருக்குக் கோட்டி கீட்டி புடிச்சிருச்சோன்னு சந்தேகப்பட்டான் தங்கையா.

இதுவரைக்கும் சீலயத் தொவைக்கலேங்கிறதுக்காகத்தான் ஊருக்குள்ள அவனத் தொவைச்சுக் காயப் போட்டிருக்காகளே தவிர தொவைக்கிற சீலைக்காக வசவு பெத்து நிக்கிறது அவன் வாழ்க்கையிலேயே இப்பத்தான். கம்மாக் கரைக்கு வலுவா இருக்கட்டும்னு நட்டுவச்ச சீமக் கருவேல மரங்க பொசு பொசுன்னு வளந்து பொத்தி மறைச்சிருக்குக பாதையெல்லாம்.

"சீ வெலகு கழுத" என்று திட்டியும் விலகாத சீமக்கருவேலம் புதர்களை, என்னமோ கனகாம்பரச் செடிகள வெலக்கிட்டுப்போற தோட்டக்காரன் மாதிர ரெண்டு கையிலயும் சர்ரு சர்ருன்னு தள்ளிக்கிட்டுப் பேயத்தேவருதவ்வுறாரு; தாண்டுறாரு. குதிகால்ல குத்துற முள்ள ஒடிச்செறிஞ்சுக்கிட்டே ஓடுறாரு. தடுமாறிய தங்கையா அவர் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் இழுப்படான். 'இந்தாளு கூட நான் சரிசமமா ஓடியாறணும்னா நான் கழுத வளத்திருக்கப்படாது குதிரை வளத்திருக்கணும்.'

தண்ணி கொஞ்சங் கொஞ்சமா வத்தி, காக் கொளமாக் கெடந்த காலம். உள் கம்மாயில் சுக்காம் பாறை மேட்டில் வெள்ளாவி வைத்திருந்தான் தங்கையா. இவர்கள் சென்று சேர்ந்தபோது அணஞ்சு போனாலும் கனிஞ்சு கணகணவென்றிருந்தது அடுப்பு. மொடாவில் அடித் தண்ணிவரைக்கும் கொதிச்சு வத்திப்போக வெள்ளாவித் துணிகளில் ஆவி வெளியேறிக் கொண்டிருந்தது.

தங்கையா லாந்தரைத் தூக்கிப் பிடிக்க, துணிகளைப் பார்த்த பேயத்தேவர் மிரண்டுதான் போனார். துணின்னா துணி... ஊர்ப்பட்ட துணி. பங்குனித் திருவிழாவுக்குப் புதுத்துணி எடுத்தவுக, போன வருசம் எடுத்த துணிய இந்த வருசம் மொத்தமாத் தொவைக்கப் போட்டுட்டாக போலருக்கு.

"யாத்தே! இந்த அழுக்குக்குள்ளயா அடஞ்சு போச்சு என் அழகம்மா சீல...?"

வெள்ளாவியில் சேர்ந்து வெந்தது பேயத்தேவர் மனசும்.

'யாப்பா! தங்கையா. இதுல ஆத்தா சீலய எடுத்துக் குடுத்திருப்பா! அந்தச் சீலக்குள்ள இருக்குடா சாமி என் சீவியம்.'

காற்றில் ஆடிய லாந்தரை ஆடாமலும் அணையாமலும் காபந்து செய்த தங்கையா தன் தாடையில் முளைத்தும் முளையாதிருந்த ஒருவாரத் தாடியைச் சுரண்டிச் சொறிந்தான்.

"இதுல 'அது' எதுன்டு காம்பேன்... எப்படித் தான் காம்பேன்?"

மூஞ்சியில் வெளிச்சம் விழுந்த பாகத்திலிருந்து அவன் தயக்கத்தைப் புரிந்து கொண்ட பேயத்தேவர் "ஏலே அய்யா! எம் பொண்டாட்டி சீல எனக்குத் தெரியாதா... கலச்சுப்போடு வெள்ளாவிய... திரும்பவும் சுத்தித்தாரது எம் பொறுப்பு."

தொவகல்லின் மீது லாந்தரை வைத்துவிட்டு 'முயற்சி பண்ணிப் பாப்போம்' என்றான் தங்கையா. என்னமோ மல்லுக்கட்டப் போறவன் மாதிரி வேட்டிய வரிஞ்சுகட்டிக்கிட்டு மொடாவுக்கு வெளிய இறக்கிவச்ச துணிகள உருவுறான் உருவுறான் உருவிக்கிட்டேயிருக்கான். நூல் சீல, வாயில் சீல, கண்டாங்கிச் சீல, சுங்கிடிச் சீல - வேட்டி, துண்டு, சமுக்காளம், போர்வை - பாவாடத்துணி லவுக்கைத் துணி நண்டாஞ்சுண்டான் போடற சட்டத்துணி, பொட்டுத்துணி எல்லாம் உருவ உருவ வந்துக்கிட்டேயிருக்கு - துச்சாதனன் இழுத்த துரோபதி சீல கணக்கா.

தொவைகல்லில் இருந்த லாந்தரைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு 'அடுத்த சீலயாத்தான் இருக்கும்... இல்ல அதுக்கு அடுத்த சீலயா இருக்கும்...' என்ற ஆவலாதியில் தவித்து இருதயம் கண்ணில் ஏறித் துடிதுடிக்க நின்றார் பேயத்தேவர்.

வெள்ளாவி பிரித்துப் பிரித்துத் தவித்துப்போன தங்கையா 'ஆத்தா சீல என்னா நெறம்' என்று கேட்டு நிறுத்தினான்.

(வளரும்)



# தெய்வங்களின் அருளை பெற உதவும் வழிபாடுகள்


ஒவ்வொருவரும் அவரவர் நட்சத்திரப் படியோ, சித்தாதி கோஷ்டப்படியோ, அவரவர் மனதிற்குப்பிடித்த தெய்வத்தின் அருளையோ, பரம்பரையாக பூசிக்கும் தெய்வத்தின் அருளையோ பெற கீழ்க்கண்ட மரங்களை கீழே குறிப்பிட்டுள்ள கிழமைகளில் நட வேண்டும்.

இதற்காக ,குறிப்பிட்ட தானியத்தை, முதல் நாள் 9 கைப்பிடி அளவு எடுத்து ஊற வைக்கவேண்டும். மரக்கன்று நட்ட அன்று ,தானியம் ஊற வைத்த நீரை மரக்கன்றுக்கு அன்றைய தினமோ அல்லது அதற்கு மறு நாளோ விட வேண்டும். தானியத்தை பறவைகளுக்கோ, பசுவிற்கோ, ஆட்டிற்கோ கொடுக்க வேண்டும்.

| வழிபடும் தெய்வம் | கிழமை | தானியம் | மரக்கன்று |
|---|---|---|---|
| விநாயகர் | ஞாயிறு | கோதுமை | வெள்ளெருக்கு |
| முருகன் | செவ்வாய் | துவரை | வன்னி மரம் |
| ராமர் | புதன் | பயறு | ஆச்சா |
| ஆஞ்சநேயர் | வியாழன் | கடலை | பவளமல்லி |
| துர்க்கை | செவ்வாய் | துவரை | வேம்பு |
| காளி | சனி | எள் | ஆலம் |
| விஷ்ணு | புதன் | பயறு | அரசு |
| சிவன் | வியாழன் | கடலை | வில்வம் |
| தேவி | வெள்ளி | மொச்ஃசை | குங்குலியமரம் |
| சப்தரிஷிகள் | புதன் | பயறு | பலா |
| பிரமன் | வியாழன் | கடலை | மஞ்சள் கொன்றை |
| சரஸ்வதி | புதன் | பயறு | புரசு |
| யட்சினி | செவ்வாய் | துவரை | நாகலிங்கம் |
| நரசிம்மர் | புதன் | பயறு | செம்மரம் |
| லலிதாதேவி | வெள்ளி | மொச்சை | மஞ்சள் கொன்றை |
| நவக்கிரகங்கள் | ஞாயிறு | நெல் | கருங்காலி |
| புவனேஸ்வரி | திங்கள் | நெல் | சந்தன |
| சீனிவாசசுவாமி | புதன் | பயறு | அரசு |
| அன்னபூரணி | புதன் | பயறு | நெல்லி |
| சூரியன் | ஞாயிறு | கோதுமை | ஒதிய |
| காயத்திரி | ஞாயிறு | கோதுமை | அரசு |
| கருடன் | செவ்வாய் | துவரை | சிம்சுபா |
| ஐயப்பன் மற்றும் மதுரை வீரன் போன்ற காவல் தெய்வங்கள் | வியாழன் | கடலை | தேக்கு |
| குருவாயூர் அப்பன் | புதன் | பயறு | தேவதாரு |
| ஸ்ரீரங்கநாதர் | புதன் | பயறு | வாதநாராயண |
| மீனாட்சி தேவி | வெள்ளி | மொச்சை | வஞ்சி |
| மகாலட்சுமி | வெள்ளி | மொச்சை | மாமரம் |
| சத்தியநாராயணன் | புதன் | பயறு | புரசு |
| குபேரன் | வியாழன் | கடலை | தங்கரளி |
| செய்த பிரார்த்தனைகளை பூஜிப்பவர்கள் | செவ்வாய் | துவரை | தாளை பனை |
| செய்த பிரார்த்தனைகளை நிறைவேற்ற முடியாதவர்கள் | திங்கள் | நெல் | சுந்தரவேம்பு |
| சித்தர் அருளைப்பெற எண்ணுபவர்கள் | செவ்வாய் | துவரை | பனை |

இவ்வாறு செய்வதால் அவரவர் பூசிக்கும் தெய்வத்தின் அருளை எளிதில் அடைய முடியும். ஒவ்வொரு தெய் வத்தை பூஜிக்கும் பொழுதும் , பூஜிப் பவர்கள் எந்தெந்த நிறத்தில் உடை அணியலாம், எந்த விதமான மாலை பயன்படுத்தி ஜெபம் செய்யலாம், எந்தெந்தப் பூக்கள் உயர்ந்தது என்பதற்கு தனி வரைமுறையே உள்ளது. அது போன்றது தான் இந்த விருட்சங்கள் நடுவதும்.

இனி... எந்தெந்தந்த தெய் வத்தை பூஜிப்பவர்கள், எந்தெந்த நாட்களில், என் னென்ன மரங்கள் நடலாம் என்பதையும், அந்த மரக் கன்றை நடுவதற்கு முன்னதாக எந்தெந்த தானியத்தை நீரில் ஊற வைத்து பயன் படுத்தலாம் என்பதையும் பாாப் போம்...



## ஜோதிடக் களம்

பொதுவாக இத்ல் குறிப்பிடாத தெய்வங்களை அல்லது சுவாமியை பூஜிக்க எண்ணுபவர்கள் உதாரணமாக, பத்மாவதி யக்ஷிணி, நீலிதாரா, பிரத்தியங்கரா தேவி, சூலினிதுர்க்கை, சொப்பன வாராஹி, உன்மத்தபைரவர், சொர்ணபைரவர், யோக ஆஞ்சநேயர் போன்ற தெய்வங்களுக்காக தெய்வீக விருட்சமான தாள பனை மரத்தை நடுவது நன்மை தரும்.

இந்த மரம் பொதுவாக தானே தான் முளைக்கும். பனை மரத்தை விட பல மடங்கு உயரமாகவும், பருமனாகவும் இருக்கும்.

இந்த தாள பனை மரத்தை நட விரும்புபவர்கள் தாங்கள் பிறந்த கிழமை அன்று நடலாம் அல்லது , இதை நடுவதற்கு விவசாய வல்லுநரை கலந்து ஆலோசிக்கலாம்.

கிராம எல்லை, நகர எல்லை, ஆற்றோரம், பொதுமண்டபங்களின் அருகில், மகான்கள் ஜீவ சமாதியான இடங்களில் , சித்தர்கள் வசிக்கும் இடத்தில், ஏரியின் அருகில், மலை சார்ந்த இடங்களில் மற்றும் புனிதமாக மக்கள் கருதக்கூடிய இடத்திலும் இதை வளர்க்கலாம்.

தாளபனை மரத்தை வெட்டுவது கூடாது. இதில் கந்தர்வர்களும், சித்தர்களும் வசிப்பதாக கருதப்படுகிறது. சில கிராமங்களில் இதில் முனி குடிகொண்டுள்ளதாகவும் கூறுவார்கள்.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் தபால் சேவை பாதிப்பு

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சில மாவட்டங்களில் தபால் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீதிகள் நீரில் மூழ்கியுள்ளமை இதற்கான முக்கிய காரணம் என தபால் மா அதிபர் எம்.கே.பி. திஸாநாயக்க கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் தேங்கிக்கிடக்கும் தபால்களை துரிதமாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தபால் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு பகுதிகளிலுள்ள தபால் நிலையங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ள நீர் வடிந்து ஓடிய பின்னர் உடனடியாக தபால் சேவையை வழமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாகவும் தபால்மா அதிபர் தெரிவித்தார்.

தபால் உத்தியோகத்தர்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குமாறு பிரதித் தபால்மா அதிபர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

## இலங்கைத் தமிழருக்கு எதிராக ஜேர்மனிய நீதிமன்றம் பயங்கரவாத குற்றச்சாட்டு

இலங்கைத் தமிழர் ஒருவருக்கு எதிராக ஜேர்மனிய நீதிமன்றமொன்று பயங்கரவாத குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஜேர்மனுக்கான பேச்சாளராக குறித்த நபர் கடமையாற்றி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளித்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஜேர்மன் குடியுரிமை பெற்றுக்கொண்ட டபிள்யூ அகிலன் என்ற 35 வயதுடைய நபர் கடந்த நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டதாகவும் அவருக்கு எதிராக பயங்கரவாத குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தடை செய்யப்பட்ட வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பில் அங்கத்துவம் வகித்த குற்றத்திற்காக அகிலனுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தில் அவர் புலிகளுக்கு உபகரணங்களை அனுப்பி வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் ஏற்கனவே மூன்று பேருக்கு எதிரான ஜேர்மன் நீதிமன்றம் வழக்கு தொடர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## இலங்கையில் உள்ள குடும்பங்களில் சராசரியாக 2 பிள்ளைகள் உள்ளனர்

### புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள குடும்பங்களில் சராசரியாக 2 பிள்ளைகள் வீதம் இருக்கின்றமை தெரிய வந்துள்ளது. எவ்வாறாயினும் இந்த எண்ணிக்கை ஏற்கனவே இருந்த எண்ணிக்கையை விட அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

புள்ளிவிபரவியல் திணைக்களம் மேற்கொண்டுள்ள ஆய்வு ஒன்றின் மூலம் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை சராசரியாக 2.3. வீதமாக அமைந்துள்ளது.

ஏற்கனவே பிள்ளைகளின் வீதம் 1.6. ஆக அமைந்திருந்தது என குடும்ப நல சுகாதார பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் டி.பி. பெரேரா கூறியுள்ளார்.

மக்கள் மத்தியில் குடும்பக்கட்டுப்பாடு தொடர்பில் ஆர்வம் குறைந்துள்ளமையே இதற்கான முக்கிய காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் குடும்பக் கட்டுபாடு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை அமுல் படுத்த உள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்ப நல சுகாதார பிரிவு அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2-9)

## இத்தாலியில் வாகன விபத்து; இலங்கையர் நால்வர் பலி

இத்தாலியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் இலங்கையர் நால்வர் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் ரோமாபுரியை நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனம் ஒன்று இவர்களின் ஜீப் மீது மோதியதில் இவர்களது ஜீப் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

இவ்வாகனத்தில் பயணித்த ஐவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் . (ஸ்ரீ-2)

# அனுமதி பெறுவதற்கு முன்னரே புலனாய்வுப்பிரிவு விசாரணை ஆரம்பம்

## சட்டத்தரணி நளின் லடுவாஹெட்டி தெரிவிப்பு

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பாக உத்தரவு பெறப்படுவதற்கு முன்பாகவே குற்றப்புலனாய்வுப்பிரிவினர் (சி.ஐ.டி) விசாரணைகளை ஆரம்பித்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன் சேகாவின் வழக்குரைஞர் நளின் லடுவாஹெட்டி நேற்று முன்தினம் வாதாடினார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர் பான வழக்கின் ட்ரையல் அட் பார்க் விசா ரணை நீதிபதிகள் தீபாளி விஜயசுந்தர (தலைவர்), டபிள்யு எம்.பி. வராவவா ,எம். இசெற். ராளின் ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது.

இதன் போது குற்றப்புலனாய்வு பிரிவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் அனுர சில்வாவை பிரதிவாதியின் வழக்குரைஞர் நளின் லடுவ ஹெட்டி குறுக்குவிசாரணை செய்தார். இதன் போது சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் அனுர சில்வா,வெள்ளைக்கொடி விவகாரம் தொடர் பாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தவர் யார் என தனக்குத் தெரியாது எனவும் ஆனால் பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் குற்றப் புலனாய்வுப்பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்ததாகவும் கூறினார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான விசாரணையை நடத்தி வந்த அதிகாரியான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிமல் சமர சேகரவின் மரணத்தின் பின்னர் தான் இவ் விசாரணையை 26.04.2010ஆம் திகதி ஆரம்பித்ததாக அனுரசில்வா தெரிவித்தார்.

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் பிரெட் டிகா ஜேன்ஸ்,லால்விக்ரமதுங்க ,மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா உட்பட முக்கிய சாட்சிகளிடம் தான் வாக்குமூலங்களை பதிவு செய்ததாக அவர் தெரிவித்தார்.

விசாரணைக்கான உத்தரவு பெறப்பட்ட திகதி பற்றிக் கூறுகையில், பதிவுகளின் படி கடந்த மார்ச் 12ஆம் திகதி உத்தரவு பெறப்பட்டுள்ளதாக இன்ஸ்பெக்டர் அனுரசில்வா தெரிவித்தார். பிரெட்டிகா ஜேன்ஸ்ஸின் வாக்குமூலம் பெப்ரவரி 18ஆம் திகதி பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் உத்தரவு பெறப்படுவதற்கு முன்பாகவே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பிரதிவாதியின் வழக்குரைஞர் வாதாடினார். (ஸ்ரீ-2)

## பாதிப்படைந்த பிரதேசங்களை புனரமைக்க விஷேட குழு

வெள்ளத்தால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீள புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது. இதன் ஒரு கட்டமாக விசேட குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் வெள்ளம் காரணமாக பாதிப்படைந்த பிரதேசங்களை மீளக் கட்டி எழுப்புவதுடன் பாதிப்படைந்த மக்களின் வாழ்வாதாரத்தை துரிதகதியில் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)




வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலையில் உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட சமையலறையை பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ். உதயரத்தினம் , ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கொற்றாவத்தை பிரதேச பொறுப்பாளர் க.விஜியந்தன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் பா.செல்வவிநாயகம் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- அல்வாய் செய்தியாளர்)

# வர்த்தகர்களிடம் கப்பம்பெற்று வந்த இந்தியக் கும்பல் கொழும்பில் கைது

(கொழும்பு)

இலங்கையின் செல்வந்த வர்த்தகர்களிடமிருந்து கப்பம் பெற்று வந்த கும்பலைச் சேர்ந்த இந்தியர் ஒருவர் உள்ளிட்ட இருவர் நேற்று முன்தினம் கொழும்பில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்தபடி இலங்கை வர்த்தகர்களைத் தொலைபேசி மூலமாக அச்சுறுத்தி கப்பம்கோரி வசூலிப்பது அவர்களின் வழக்கமாக இருந்துள்ளது. அதன் பிரகாரம் அவர்கள் பம்பலப்பிட்டியில் வசிக்கும் தமிழர் ஒருவரிடமிருந்து கப்பம்பெற முயன்றபோதே மாட்டிக் கொண்டுள்ளனர்.

பிரஸ்தாப வர்த்தகருக்கு இந்திய தொலைபேசி இலக்கமொன்றிலிருந்து வந்த தொலைபேசி அழைப்பின்மூலம் பெருந்தொகைப்பணம் கப்பமாகக் கோரப்பட்டுள்ளது. அதுபற்றி அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸாரின் அறிவுறுத்தலின் பிரகாரம் அதற்கடுத்த தடவை அழைப்பு வந்தபோது கப்பம் கோருபவர்களின் கோரிக்கையின் பிரகாரம் தான் பணம் கொடுக்க தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து அவரிடமிருந்து கப்பத் தொகையை நகைக்கடையொன்றில் வைத்து வாங்கிக் கொள்ள முயன்ற போது கப்பம் கோரிய கும்பல் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் இந்தியர் மற்றையவர் இலங்கையர்.

இந்திய நபர் கடந்த சில வாரங்களுக்கு முன்புதான் இலங்கைக்கு சுற்றுலா விசாவில் வந்திருந்தார். இலங்கையைச் சேர்ந்தவர் கொழும்பு முகத்துவாரப் பகுதியில் வசிப்பவர் எனத் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் இந்தியாவின் இராமநாதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதும் அப்பகுதியில் துணி வியாபாரத்தில் ஈடுபடும் பிரதேசத்தின் முக்கிய புள்ளியான அவரது மைத்துனர் ஒருவரே வர்த்தகர்களை அச்சுறுத்தி தொலைபேசி மூலம் கப்பம் கோருபவர் என்பதும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அவரையும் கைது செய்வதற்கு வெளிவிவகார அமைச்சின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### சிற்றாமுட்டி/நிலத்துத்தி

**Botanical Name - Sida cordifolia**
**Family - Malvaceae**
**Engl- Country - mallow**
**Sinh- Wel-bevila/bebila**

இவ்வகை மூலிகையானது நேரானதும் செடிவகையைச் சார்ந்து பல்லாண்டு காலம் வாழக்கூடிய பல கிளைகளைக் கொண்ட தும் சுணைகளால் மூடப்பட்டதுமான தாவரமாகும். இலைகள் தனியிலை, மாறிலை அடுக்கம் கொண்டவை. கோளவடிவா னதும் 1.9 தொடக்கம் 5 செ.மீ நீளம் கொண்டவை. இலைகளின் விளிம்புகள் அரிவாழ்மனை அமைப்புக் கொண்டவை. இலைகள் , இலைக்காம்புகள் அனைத்தும் சுணைகள் கொண்டவை. ஒழுங்கான இருபாலான பூக்கள் காணப்படும். இவை மஞ்சள் நிறம் கொண்டவை. வருடம் முழு வதும் பூக்களை அவதானிக்கலாம்.

### பரம்பலும் இனவிருத்தியும்

வெப்ப பிரதேசங்களில் களைச் செடியாகக் காணப்படும். யாழ்ப்பாணத்தில் வளரும் சிற்றாமுட்டி உருவவியல் ரீதியாக தூய இனமாகும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். வேர்க்கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவப்பயன்கள்

இதன் வேர்கள், இலை, விதை, முழுச் செடியும் மருத்துவத்தில் முக்கிய பயன் உள்ளவை.

★ இதன் வேர்களை சேகரித்து சிறுகச் சிறுக வெட்டி நிழலில் உலர்த்தி ஒரு பங் கிற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி அளவு காலை, மாலை வழங்க ஆஸ்துமா நோயில் ஏற்படும் மூச்சுக்கஷ்டம், காய்ச்சல் வேகத்தால் ஏற்படும் தாகம் தீருவதுடன் பித்த நோய்களையும் தணிக்கும். (Ephedrine) எனும் அல்கலொயிட் இதன் விதைகளிலும் வேர்களி லும் காணப்படும். இதனால் ஆஸ்துமா நோயில் சிறந்த பலனைக் கொடுக்கும்.



★ மூலநோய் உள்ளவர்கள் இதன் இலைகளை சிறிதாக அரிந்து நெய்யில் வதக்கி ஒரு மேசைக்கரண்டியளவு எடுத்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல், ஆசனக்கடுப்பு நீங்கி மூல நோயைக் கட்டுப்படுத்தும்.

★ இதன் விதைகளையும் சேகரித்து கழுவி நிழலில் உலர்த்தி பொடி செய்து 2 கிராம் அளவு ஒரு டம்ளர் பாலில் அருந்த மூல நோயைக் கட் டுப்படுத்தி உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக் கும்.

★ சிற்றாமுட்டி வேர்ச்சூரணம் 200 கிராம் எடுத்து 2 லீற்றர் நீரிலிட்டு 1/2 லீற்றராக குறுக்கி அதில் சுக்கு, மிளகு, ஏலம், வெட்டிவேர் ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு அரைத்து சேர்த்து நல்லெண்ணெய் 3/4 லீற்றர் விட்டுக்காய்ச்சி தைல பதத்தில் வடித்துக் கொண்டு வாரம் இருமுறை தேய்த்து முழுகி வர வாதரோகங்களும் கண்ரோகங்களும் தணியும்.

★ இதன் உடன் இலைகளை சேகரித்து அரைத்து சீழ்பிடித்த கண்டல் காயங்களுக்கு திண்மையாக பூச சீழ் வெளியேறி புண்கள் சிவப்பு நிறத்தை அடைந்து ஆறத்தொடங்கும்.

★ சிற்றாமுட்டி வேரை துண்டு துண்டாய் நறுக்கி பசுவின் பாலில் போட்டு காய்ச்சியிறுத்துப் பாலை சாப்பிட்டு வந்தால் வாய்வுக் கோளாறுகள் நீங்கி பசி உண்டாகும்.

★ உடல்வலி, எவ்வகையான பித்த சுரமாயிருப்பினும் ஈச்சங்குருத்து, சிற்றாமுட்டி வேர், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், இலாமிச்சம்வேர், வில்வவேர், தாமரைக்கிழங்கு, சந்தனக்கட்டை, இலுப்பைப்பூ இவை ஒவ்வொன்றும் 10 கிராம் வீதம் எடுத்து 2 லீற்றர் நீர்விட்டு 1/4லீற்றாராக வற்றக் காய்ச்சி 60 மில்லி அளவு காலை, மாலை கொடுக்க உடல் உஷ்ணம் நீங்கி காய்ச்சல் தணியும்.

★ சிற்றாமுட்டிவேர், வில்வக்காய், சீந்தில் தண்டு, நிலவேம்பு, சுக்கு, கோரைக்கிழங்கு ஒவ்வொன்றும் 10 கிராம் எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக்காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி கொடுக்க விட்டு விட்டு வரும் காய்ச்சல் தணிந்து வாதநோய்களும் தீரும்.


டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

★ இதன் வேர்களை சிறுசிறு துண்டாக நறுக்கி கழுவி நிழலில் உலர்த்தி அரவல் நொறுவலாக இடித்து 30 கிராம் அளவு எடுத்து 200 மில்லி வெந்நீரில் 15 நிமிடங்கள் ஊறவிட்டு பாதி காலையும் பாதி மாலையும் அருந்தக் கொடுக்க நரம்புகள் பலம் பெறும்.

★ வெள்ளைசாய்தல், அடிக்கடி சிறுநீர் சொட்டுச்சொட்டாக வெளியேறுதல் ஆகியவற்றுக்கு சிற்றாமுட்டி வேர்ப்பட்டையை நிழலில் உலர்த்திபொட்டித்து 2 கிராம் அளவு ஒரு டம்ளர் பாலில் இரவில் 40 நாட்கள் தொடர்ந்து அருந்தி வர மேற்படி நோய்கள் தணியும்.

# குழந்தைக்கு எது பரிசு?

ஆசையோடு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டீர்களே தவிர, இப்போது அவர்களுடன் அல்லாடிக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் உங்கள் கட்டுப்பாடுகளை மீறிப்போகிறார்களே என்கிற பதற்றம் உங்களை ஆட்டுவிக்கிறது. உங்கள் மகன் நண்பர்களுடன் சிகரெட் பிடித்துவிட்டு வருகிறான். உங்களால் தாங்க முடியவில்லை. "நீ செய்த காரியத்தால் இந்த வீட்டுக் கௌரவமே



பாழாகிவிட்டது!" என்று முகமெல்லாம் சிவக்க, காச் மூச் என்று அவனிடம் எகிறுகிறீர்கள். உடனே, அவன் சிகரெட் பிடிப்பதை விட்டு விடப் போகிறானா என்ன? ஏதோ ஒரு இருட்டு மூலையில் இரகசியமாக நின்று சிகரெட் பிடித்துவிட்டு, வாசனை தெரியாமல் இருக்க, வாயில் எதையோ மென்றுகொண்டே வருவான்.

சிகரெட் பிடிப்பது தவறு என்று கற்றுத்தரப் பார்த்தீர்கள். ஆனால், அதற்கு மாறாக, பொய்களையும் கள்ளத்தனத்தையும் சேர்த்து அவனுக்குக் கற்றுத்தந்து விட்டீர்கள். அவனைத் திருத்தி விடவேண்டுமென்ற ஆர்வத்தில், மிரட்டலாக வலியுறுத்திச் சொன்னீர்கள்.

அதிகாரத்தால் கொஞ்சக் காலத்துக்குத்தான் இதனை இழுத்துப்பிடிக்கலாம். ஆனால், உங்களுடைய உண்மையான அக்கறை அவனுக்குப் புரியாமலேயே போய் விடும். அவனிடம் நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றம் வந்து விடாது.

அவனிடம் அன்பை மட்டுமே காட்டப் பழகியிருந்தீர்களேயானால், ஆரம்பத்திலிருந்தே உங்கள் இருவருக்கிடையில் நல்ல நட்பு வேரூன்றியிருக்கும்.

எது நல்லது, எது கெட்டது என்பதைப் புரிந்து கொள்ளும் புத்திசாலித்தனமும் அவனுக்கு வந்திருக்கும். நீங்கள் சொல்வது அவனது நன்மைக்காகவே என்பதைப் புரிந்து கொள்வான். மாறாக, நீங்கள் அவனை அதிகாரம் செய்ய நினைத்தால், பிரச்சினைகள் வரும்போது உங்கள் ஆலோசனையையும், உதவியையும் கேட்கத் தயங்குவான்.

சங்கரன் பிள்ளை தன் சகோதரியின் மகனுக்கு பிறந்தநாள் பரிசாக ஒரு மலிவான தகர மத்தளத்தை வழங்கியிருந்தார்.

ஒரு மாதம் கழித்து அவனைப் பார்க்கப்போனார். சிறுவன் கண்கள் மினுக்க, அவரிடம் ஓடிவந்தான்.

"மாமா , எனக்கு இதுவரை வந்த பரிசுகளிலேயே நீங்கள் கொடுத்ததுதான் சூப்பர். அதை வைத்துக் கொண்டு சம்பாதிக்கக் கற்றுக்கொண்டேன்." என்றான்.

சங்கரன் பிள்ளைக்கு பெருமை பிடிபடவில்லை.

"ஓ, கச்சேரிகளுக்குப் பக்கவாத்தியம் வாசிக்கப் பயிற்சி செய்கிறாய?"

"அதில்லை மாமா! மத்தளத்தைத் தட்டாமால் இருக்க, அம்மா தினமும் பத்து ரூபா தருகிறாள். தாத்தா வாரத்துக்கு ஐம்பது ரூபா தருகிறார்." என்றான் சிறுவன்.

உங்களை முட்டாளாக்கி, காரியத்தைச் சாதித்துக்கொள்ள உங்கள் மகனும் அறிவான். அது அவன் தவறல்ல. அவனை அப்படி வளர்த்தது. உங்கள் தவறு.

தெளிவாக ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளுங்கள்.

குழந்தை, உங்கள் சொத்து அல்ல. உங்கள் மூலம் ஓர் உயிர் இந்த உலகுக்கு வந்தது என்பது உங்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு பெருமையே தவிர, குழந்தை ஒரு போதும் உங்கள் உடமையல்ல.

குழந்தையை அடித்து வளர்ப்பது அருவருப்பான செயல்! உண்மையில் அந்தக் குழந்தையால் எதிர்க்க முடியாது என்பதுதானே உங்கள் கை உயர்வதற்கான காரணம்? நிராயுதபாணி மீது வாள் வீசுவது வீரமா... விவேகமா?

உடல்ரீதியாகத் தன்னைப் பார்த்துக் கொள்ளும் திறமை மட்டும்தான் குழந்தைக்கு இருக்காது. மற்றும்படி, குழந்தை என்பது எந்தக் கோணலும் இல்லாத புது உயிர். வாழ்க்கையை சுமையாகவோ துக்கமாகவோ பார்க்கப் பழகாத உயிர். கள்ளங்கள் அறியாததால், உங்களைவிட மிக அற்புதமாக உலகைப் பார்வையிடும் வாய்ப்புக் கொண்ட உயிர்.

ஒரு பூச்செடி நன்றாக வளர வேண்டுமென்றால், அருகிலேயே உட்கார்ந்து அதைச் சீண்டிக் கொண்டிருப்பீர்களா? மாட்டீர்கள். தேவையான உரத்தைப் போட்டுத் தண்ணீர் ஊற்றி, கவனித்துக் கொள்வீர்கள். செடி தானாகப் பூக்கும்.

குழந்தையும் அப்படித்தான். தேவையான பாதுகாப்பை மட்டும் அளித்து விட்டு, உங்கள் எண்ணங்களை அதன் மீது திணிக்காமல் இருங்கள், போதும்!

ஒரு பரபரப்பான தொழிலதிபருக்கு அவருடைய ஒரே மகன் பிசினசில் ஆர்வம் காட்டாமல் இசையில் லயித்து, கிற்றாரைத் தட்டிக்கொண்டிருந்தால் பொறுக்க முடியாது.

ஓர் இசையமைப்பாளரின் வாரிசு ஆட்டோ மொபைல் சாப்பில் ஸ்க்ரூக்களை முடுக்கிக்கொண்டிருந்தால், அவரால் தாங்கமுடியாது.

ஏன்?

தனது மரணத்திற்குப் பிறகும் தன்னுடைய மிச்சமாக உலகில் ஏதாவது இருக்கவேண்டும் என்ற அற்ப ஆசைதான் காரணம். அதனால்தான் குழந்தைகளைத் தங்களைப்போல் வளர்த்து தங்



## ஆன்மீகம் 12

கள் அடையாளங்களாக விட்டுப்போக விரும்புகிறார்கள்.

உங்களுக்குப் பிறக்கும் குழந்தையும் நீங்கள் செய்யும் அதே அபத்தங்களையே தொடர்ந்து செய்ய வேண்டுமென்று ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? உங்கள் குழந்தைகள் நீங்கள் செய்யத்துணியாத காரியங்களைச் செய்து பார்க்கும் வல்லமை பெற்றிருக்க வேண்டாமா? அப்படி அடுத்தடுத்த தலைமுறைகள் செய்தால்தானே தேக்கமில்லாமல் உலகம் வளர்ச்சியைக் காணமுடியும்?

அன்பும் உண்மையான கவனிப்பும் தான் உங்கள் குழந்தைக்கு நீங்கள் வழங்கவேண்டியது. ஆதிக்கம் அல்ல! உங்கள் குழந்தைக்குக் கோபமும், அகங்காரமும் இல்லாத ஆனந்தமான சூழ்நிலையை அமைத்துக் கொடுங்கள். உங்களைவிட உங்கள் குழந்தை சிறப்பாக வளரும். சந்தேகமே வேண்டாம்.

அப்படி வளரும் குழந்தை தவறான பாதைக்கு ஒருநாளும் போகாது.

சந்தர்ப்ப சூழ்நிலையால் ஒருவேளை அப்படிப் போனாலும், சீக்கிரமே உணர்ந்து உங்களிடமே திரும்பி வந்து விடும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிறுவர் இலக்கியம்

06

## சிறுவர் பாடல், சிறுவர் கதைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறப்பு நோக்கு

அறநெறிகளை வலியுறுத்துவனவாக இக்கதைகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தொகுப்பு வடக்கு, கிழக்கு மாகாண விருது பெற்றதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுவர்களுக்கான கதைகளைச் சுவைபடக் கூறுவதில் நிகரற்றவரான மாஸ்டர் சிவலிங்கம் பயங்கர இரவு, அன்பு தந்த பரிசு, சிறுவர் கதைமலர் பாகம்-1, பாகம் -2 ஆகிய தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். பயங்கர இரவு என்னும் தொகுப்பில் பயங்கர இரவு, மனித மண்டை ஓடு, மாலைநேர மர்மக் கிழவன், எருமைத்தீவு மர்மம், பேய்க்கிழவன், பலே பாப்பாக்கள் என்னும் கதைகள் உள்ளன. அன்பு தந்த பரிசு என்னும் தொகுப்பு மொழிபெயர்ப்புக் கதைகளைக் கொண்டது. இத்தொகுப்பில் அன்புதந்த பரிசு, பேராசை பெருநட்டம், புத்தியுள்ள அரக்கி, போலி இளவரசன், மர்ம இளவரசன், நண்பனும் எதிரியும், அதிசய இயந்திரம், பறக்கும் இளவரசி ஆகிய கதைகள் உள்ளன. சிறுவர்களுக்கு நற்பண்புகளை எடுத்துக்கூறுவனவாக இக்கதைகள் அமைந்துள்ளன.

சிறுவர் கதைமலர் பாகம்-1 என்னும் தொகுப்பும் மொழிபெயர்ப்புக் கதைகள் அடங்கியதே. இத்தொகுப்பில் வல்லவனுக்கு வல்லவன், சிவாஜி எங்கே?, ஆராய்ச்சி மணி, புத்திசாலிப் பெண், இரகசியம் என்ன? ஆகிய கதைகள் உள்ளன. சிறுவர் கதைமலர் பாகம்-2 என்னும் தொகுப்பில் மந்திரக் கண்ணாடி, தங்கமுடி நங்கை, பறக்கும் றொட்டி, வெற்றி யாருக்கு, பலே பேர்வழி ஆகிய கதைகள் உள்ளன.

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சிறுவர் இலக்கிய ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை"**

மருதமைந்தன், 'துணிச்சலான தோழர்கள்' (2007) என்னும் சிறுவர் நெடுங்கதையினை(நாவல்)எழுதியுள்ளார். எளிய நடையில் இக்கதை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு வண்ணத்துப்பூச்சிப் பூங்கா நிறுவனத்தினரால், அன்பில் மலர்ந்த பூ (1999), பூங்கா தென்றல் (2003) ஆகிய இரு தொகுப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையின் யுத்த சூழலால் உடல், உள பாதிப்பிற்குட்பட்ட சிறுவர்களின் மறுவாழ்விற்காக ஆரம்பிக்கப்பட்டதே வண்ணத்துப்பூச்சிப் பூங்காவாகும். அன்பினால் மலர்ந்த பூ என்னும் தொகுப்பில் அன்பினால் மலர்ந்த பூ, இரு நண்பர்கள், குரங்கு ராணி, ஒற்றுமை குறைந்திடில், நல்ல ஆமையும் திருட்டுக் காகமும், ஒற்றுமையே பலம், தீயோர்க்கு நன்மை செய்வோம், உறவும் பிரிவும், மனமாற்றம், நல்லதைச் சொல்லுவோம், சோம்பல் மலை ஆகிய கதைகள் உள்ளன. இக்கதைகளின் ஆசிரியர்கள் இங்கு அடைக்கலமாகியிருக்கும் சிறுவர்களே என்பது மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். பிராணிகளாகத் தங்களை இவர்கள் உருவகித்துத் தங்களது அனுபவங்களை வெளிப்படுத்தி உள்ளனர்.

பூங்கா தென்றல் என்னும் தொகுப்பிலுள்ள கதைகள், மேற்குறித்த நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட (நான்கு மாதங்களுக்கு ஒருதடவை) 'காற்றாடி என்னும் சிறுவர் சஞ்சிகையில் (2000-2003 வரை வெளிவந்தவை') என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# விமானம்போல் பறந்து செல்லும் நவீன கார்



சமீப காலமாக உலகம் முழுவதிலும் வாகனங்களின் எண்ணிக்கை பல மடங்கு பெருகி விட்டது. இதனால் போக்குவரத்து நெரிசல் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது.

இதனால் திட்டமிட்டபடி ஒரு இடத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்படி போக்குவரத்து நெரிசல் ஏற்படும் இடங்களில் விமானம்போல் பறந்து சென்றால் என்ன? என்று நமக்குத் தோன்றும். இதையே தற்போது நியமாக்கி இருக்கிறது அமெரிக்காவைச் சேர்ந்த டெரபுஜியா டிரான்சிசன். நிறுவனம். இந்நிறுவனம் தயாரித்துள்ள நவீன கார் வீதியில் மணிக்கு 105 கி.மீ. வேகத்திலும் ஆகாயத்தில் 185 கி.மீ வேகத்திலும் பறக்கும். இந்தக் காருக்கு விமானத்துக்கு பயன்படுத்தும் பெற்றோல் தேவையில்லை. சாதாரண பெற்றோலே போதும். இதன் விலை ரூ.90 இலட்சம் ஆகும். டெரபுஜியா நிறுவனத்தைச் சேர்ந்த ரிச்சர்டு ஜெர்ஷ் கூறும் போது,

கார் போன்ற தோற்றத்தில் இருக்கும் இந்த விமானத்தை முதலில் விமான நிலையங்களில் இருந்து இயக்க முடியும். தற்போது 100 பறக்கும் கார்களுக்கு ஓடர் வந்துள்ளது. இந்தக் கார் வீதியிலும் ஓடும். ஆகாயத்திலும் பறக்கும். இவற்றை இந்த ஆண்டு இறுதிக்குள் தயாரித்து விடுவோம் என்றார்.

டெரபுஜியா நிறுவன தலைமை செயல் அதிகாரி கார்ல் டயட்ரிச் கனேடியன் தொலைக் காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில்,

பறக்கும் கார்களை நாங்கள் 28 தடவை சோதனை செய்து பார்த்துவிட்டோம். இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்தது.

இந்தப் பறக்கும் கார்களை இயக்குவது எளிது. வருங்காலத்தில் பறக்கும் கார்களின் எண்ணிக்கை பலமடங்கு பெருகும். ஆகாயத்தில் வானிலை சரி இல்லாவிட்டால் விமானங்களை இயக்குவதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. ஆனால், இந்தப் பறக்கும் கார்கள் வீதி, ஆகாயம் இரண்டிலும் பறப்பதால் இதற்கு மவுசு அதிகமாகவுள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# முதற்தடவையாக சூரியனின் முப்பரிமாண படம் வெளியீடு

(லண்டன்)

அமெரிக்காவின் நாசா அனுப்பிய இரண்டு செயற்கைக் கோள்கள் சூரியனின் முழு உருவத்தையும் படம்பிடித்து அனுப்பியுள்ளன.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா கடந்த 2006 இல் சூரியனைப்பற்றி ஆராய ஸ்டீரியோ என்ற இரண்டு செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது. பூமியின் பக்கமாக ஒரு செயற்கைக் கோளும் சூரியனுக்கு பின்புறமாக மற்றொரு செயற்கைக் கோளும் நகர்ந்து சென்று சூரியனின் முப்பரிமாணத்தை படம் பிடித்து அனுப்பியுள்ளன.

பிரிட்டனைச் சேர்ந்து பேராசிரியர் ரிச்சர்ட் ஹாரிசன் என்பவரே இந்தத் திட்டத்தை வடிவமைத்தவர் ஆவார். இது குறித்து அவர்



குறிப்பிடுகையில், ஸ்டீரியோ செயற்கைக் கோள்கள் சூரியனின் 360 டிகிரியையும் படம் பிடித்துள்ளன. சூரியன் வெளியிடும் பிரமாண்ட துகள்கள் காந்த கதிர்கள் போன்றவற்றையும் ஸ்டீரியோ படங்கள் மூலம் தெரிவித்துள்ளன. இந்தப் படங்களை வைத்து விண்வெளியின் தட்பவெட்ப மாற்றங்களையும் அறிந்துகொள்ள முடியும். எல்லோரும் நினைப்பது போல சூரியன் அழகிய மஞ்சள் நிற அமைப்பைக் கொண்டதல்ல என்றார். (ஸ்ரீ-2)

# இரத்தத்தை உறையவைக்கும் புதிய வகை பண்டேஜ்

(லண்டன்)

மருத்துவ விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள இரத்தத்தை உறைய வைக்கும் புதிய வகை பண்டேஜ் விரைவில் விற்பனைக்கு வரவுள்ளது.

விபத்து மற்றும் எதிர்பாராமல் ஏற்படும் காயங்களால் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டு உயிரிழக்கும் அபாயம் கூட ஏற்படும். தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் பண்டேஜ்கள் சிறிய காயங்களில் அழுக்கு மற்றும் கிருமிகள் தொற்று ஏற்படாமல் இருக்கும் வகையில் காயங்களை மூடி வைக்கப் பயன்படுகின்றன.

இந்த பண்டேஜ்களால் இரத்தப் போக்கை கட்டுப்படுத்த முடியாது. இந்நிலையில் எடின் பர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானிகள் குழு புதிய வகை பண்டேஜை உருவாக்கியுள்ளது. நைலோனில் சிறிய அளவில் பிளாஸ்டிக்கைக் கொண்டும் சில இரசாயனங்களைக் கொண்டும் இந்த பண்டேஜ் தயாரிக்கப்பட்டுள்ளது.

அடிபட்ட காயத்தின் மீது இந்த பண்டேஜ் போடும் போது காயத்திலிருந்து வெளியேறும் இரத்தம் உடனடியாக உறைந்து இரத்தப் போக்கு குறைகிறது. இதன்மூலம் காயப் பட்டவர் உரிய சிகிச்சை எடுத்துக் கொள்ளும் வரையில் அதிகபடியான இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்துகிறது.

போரின் போது பெரிய அளவில் காயப்படும் படை வீரர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நைலோனைக் கொண்டு பல்வேறு விதங்களில் உருவாக்கிப் பார்த்தனர். இதற்கு 12 மாதங்கள் ஆனது. இதுகுறித்து பண்டேஜை உருவாக்கிய குழுவின் தலைமை விஞ்ஞானி மார்க் பிராண்ட்லி கூறுகையில்,

நைலோனைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த பண்டேஜில் சிறிய மருந்துக்கலவை தெளிக்கப்பட்டுள்ளது. இதை பயன்படுத்துவதால் இரத்தம் விரைவாக உறைந்து இரத்த இழப்பை தடுக்க உதவுகிறது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)




# போராட்டமும் பேச்சும் தொடரும்; எகிப்தில் புதிய திருப்பம்

(கெய்ரோ)

எகிப்தின் துணை ஜனாதிபதி ஓமர் சுலைமான், முஸ்லிம் சகோதரத்துவ கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய முதல் ஆலோசனை தோல்வியில் முடிந்தது. 'எங்கள் கோரிக்கைகளை அரசு ஏற்கவில்லை. போராட்டம் தொடரும். எனினும் பேச்சுவார்த்தையும் தொடரும்' என்று முஸ்லிம் சகோதரத்துவ கட்சி அறிவித்துள்ளது. இதற்கிடையில் கெய்ரோவில் இயல்பு நிலை கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பத் தொடங்கியுள்ளது.

எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபராக் பதவி விலகக் கோரி 14ஆவது நாளாக மக்களின் போராட்டம் தாரிர் சதுக்கத்தில் நடந்து வருகிறது. இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முஸ்லிம் சகோதரத்துவ கட்சி உள்ளிட்ட சில எதிர்க்கட்சிகளுடன் துணை ஜனாதிபதி ஓமர் சுலைமான் பேச்சுவார்த்தை நடத்தினார். உடனடியாக ஜனாதிபதிப் பதவியில் இருந்து முபராக் விலக்கப்பட வேண்டும். இடைக்கால அரசின் தலைவராக ஓமர் சுலைமான் பதவியேற்றுக் கொள்ளவேண்டும். இந்தாண்டு செப்டெம்பரில் பாரபட்சமற்ற வெளிப்படையான தேர்தலை நடத்த வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் நிராக்கப்பட்டன.

இதையடுத்து செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முஸ்லிம் சகோதரத்துவ கட்சியின் முக்கிய தலைவர்கள், அரசு நல்லநோக்கத்துடன் செயல்படுகிறது. ஆனால் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இல்லை. எங்களின் சில கோரிக்கைகளை மட்டுமே அவர்கள் ஏற்றனர். எனினும் பேச்சுவார்த் தை தொடரும். அதேநேரம் போராட்டமும் தொடரும் என்று தெரிவித்தனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெ. வெளியுறவுத்துறை செயலர் ஹிலாரி கிளின்டன் அளித்த பேட்டியில் முபாரக், வரவிருக்கும் தேர்தலில் கலந்து கொள்ளமாட்டேன் கட்சித்தலைவர் பதவி யில் இருந்து நானும் என் மகனும் விலகிவிட்டோம் என்று கூறியுள்ளார். 30 ஆண்டுகளில் முதன் முறையாக, துணை ஜனாதிபதிஒருவரை நியமித்துள்ளார். இவையனைத்தும் குறிப்பிடத் தகுந்த நடவடிக்கைகள், அதேநேரம் இவை முதற்கட்ட நடவடிக்கைகள் தான். சூமுகமாக அதிகார மாற்றத்திற்கு இவை வழிகோலாது. எகிப்து அரசியல் சாசனப்படி, ஜனாதிபதி பதவி விலகினால், 60 நாட்களில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இன்றைய நிலையில் அரசியல் சாசனத்தைத் திருத்தி தேர்தலும் நடத்துவதற்கு அந்த 60 நாட்கள் போதாது. அதனால், முபாரக் பதவி விலகுவதில் நடைமுறைச் சிக்கல் இருப்பதை எகிப்து மக்கள் உணரவேண்டும். அவரை உடனடியாக பதவில் இருந்து விலக்க முடியாது என்று தெரிவித்தார். (ஸ்ரீ)



சுவீடனில் பாலியல் குற்றச்சாட்டு வழக்கின் விசாரணைக்காக விக்கிலீக்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஜுலியன் அசேஞ்ச் லண்டன் பால்மார்ஸ் நீதவான் நீதிமன்றில் ஆஜராவதற்காக வருகை தருவதைப் படத்தில் காணலாம்.

# கோவிலின் மீது உரிமை கொண்டாடி தாய்லாந்து, கம்போடியா மோதல்

(நாம் பென்)

பழைமை வாய்ந்த கோவில் ஒன்றின் மீதான உரிமைப் போராட்டம் காரணமாக கடந்த நான்கு நாட்களாக, தாய்லாந்து மற்றும் கம்போடியா இராணுவ வீரர்களுக் கிடையில் துப்பாக்கிச் சண்டை நடந்து வரு கிறது. இச் சண்டையில் இதுவரை, ஐந்து பேர் பலியாகியுள்ளனர். ஆயிரக் கணக்கானோர் அப் பகுதியில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகளின் எல்லை அருகில், கி.பி. 11ஆம் நூற்றாண்டில் கெமர் பேரரசு காலத்தில் கட்டப்பட்ட, பிரசாத் ப்ரா விகார் என்ற இந்துக் கோவில் உள்ளது. இதன்மீது, இருநாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன. நூற்றாண்டைக் கடந்த இப்பிரச்சினையில், 1962 இல் சர்வதேச நீதிமன்றம் தலையிட்டு, கோவில் கம்போடியாவுக்குச் சொந்தமானது என்றும், அதன் அருகிலுள்ள இடங்கள் தாய்லாந்துக்குச் சொந்தமானவை என்றும் தீர்ப்பளித்தது.

ஆயினும், தொடர்ந்து பல ஆண்டுகளாக இருதரப்புக்கிடையில் அவ்வப்போது, கோவில் உரிமை தொடர்பாக மோதல் நடந்து வந்தது. இந்நிலையில், கடந்த நான்கு நாட்களாக இருதரப்பு இராணுவத்துக்கும் இடையில் இப் பிரச்சினையால் துப்பாக்கிச் சண்டை மூண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சண்டையில் பீரங்கிகளும், இயந்திரத்துப்பாக்கிகளும் பயன்படுத்தப்பட்டன. தாய்லாந்து இராணுவம் தாக்கியதில் கோவிலின் ஒரு பகுதி சேதம் அடைந்துள்ளதாக, கம்போடிய அரசு குற்றம் சாட்டியுள்ளது. இச் சண்டையில், இரணடு கம்போடிய வீரர்கள் மற்றும் அந் நாட்டைச் சேர்ந்த ஒருவர், தாய்லாந்தின் ஒரு வீரர் மற்றும் ஒருவர் என ஐந்து பேர் பலியாகியுள்ளனர்.

கம்போடியப் பிரதமர் ஹுன் சென், இப் பிரச்சினையில் ஐ.நா. தலையிடக்கோரியுள்ளார். தாய்லாந்து பிரதமர் அபிஜித் வெஜ்ஜாஜிவா, அமைதியான முறையில் இப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். இரு நாட்டு எல்லைகளிலும் வசித்து வந்த ஆயிரக்கணக்கானோர் இச் சண்டையால் பீதியடைந்து தங்கள் வசிப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இதுகுறித்து செய்தி வெளியிட்ட ஐ.நா., பொதுச் செயலர் பான் கீ மூன், "சண்டையை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டுள்ளார். (ஸ்ரீ)





தெல்லிப்பழை கட்டு வன்புலம் மகாவித்தியாலத்தின் பொன்விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொன்விழா மலரினை அதிபர் க.பத்மநாதன் வழங்க,வலிகாமம் கல்வி வலயப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் வெளியிட்டு வைப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# பொருட்களின் விலையேற்றத்தை தவிர்க்க உரிய நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றத்தை தவிர்க்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் அது குறித்து கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

காலநிலை காரணமாக உள் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இத்தகைய பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. இதனை வைத்து அரசியல் இலாபம் தேட முனைவோரை மக்கள் நிராகரிப்பர் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புத்தளையில் நடைபெறும் தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி நிகழ்வில் கலந்துகொண்ட போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இடையிலான தரகர்களின் செயற்பாடுகளே அத்தியாவசியப் உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்கு மற்றும் ஒரு காரணம். இது தொடர்பில் நாம் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறோம்.

விலை அதிகரிப்பை அரசியலாக்குபவர்கள் தான் மக்களுக்கு குறைந்த விலையில் அத்தியாவசிப் பொருட்களை வழங்கிய ச.தொ.ச நெல் சந்தைப்படுத்தும் சபை போன்றவற்றை மூடினார்கள் என்பதை மக்கள் நன்கு அறிவர்.

விவசாயிகள் -பாவனையாளர் இரு சாராரையும் கவனத்தில் கொண்டு அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை தவிர்க்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பண்ணிசை,திருக்குறள் மனன போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் புண்ணியநாச்சியம்மையார் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டிகளில் பங்குபற்றி பரிசு பெற்றோர் விபரம் பரீட்சை செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றோர் விபரம் வருமாறு,

**பண்ணிசைப் போட்டி**

**கீழ்ப்பிரிவு**

ஹரிஷ்யந்தி சற்குணானந்தசர்மா (யாழ்/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), மதுரா கார்த்திகேசு (யாழ்/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை), சங்ஹவி கமலேஸ்வரன் (யாழ்/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

**மத்தியபிரிவு**

விஜயகுமார் வத்சாங்கிதசர்மா (யாழ்/ இந்துக் கல்லூரி), அருந்ததி சற்குணானந்தசர்மா (யா/இந்து மகளிர் கல்லூரி), பரஞ்சோதி சாரங்கன் (யா/ யாழ்ப்பாணக் கல்லூரி)

**மேற்பிரிவு**

வருணியா தில்லைநாதன் (யாழ் .இந்து மகளிர் கல்லூரி), சிவதாரணி செல்வரட்ணம் (யா/ சென்மேரிஸ் வித்தியாலயம்), கணேசலிங்கம் சுபாங்கன் (யாழ்/ இந்துக் கல்லூரி)

**திருக்குறள் மனனப் போட்டி**

**கீழ்ப்பிரிவு**

தீபிகா லிங்கபாலன் (யா/ மகாஜனக் கல்லூரி), தர்சிகா செல்வரத்தினம் (யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்), பானுஜா குமரகுருபரன் (யா/ இந்து மகளிர் ஆரம்பபாடசாலை)

**மத்திய பிரிவு**

யதுர்சனா ஜெயராஜா (யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), மதுராங்கனி நந்தகோபால் (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இராஜசேகர் லோஜிதன் (யா/ ஹாட்லிக் கல்லூரி),

**மேற்பிரிவு**

விவிதாரணி மகேஸ்வரன் (யா/வட்டு .இந்துக் கல்லூரி), தேவசேனா விஜயகுமார் (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மீனேஸ்வரன் விதுரூஷன் (யா/ வட்டு .திருநாவுக் கரசு மகா வித்தியாலயம்). (ஸ்ரீ)

# தொழிற்பயிற்சி நெறிகள்

யாழ். வலயக்கல்வி அலுவலகத்தின் முறைசாரக் கல்விப்பிரிவால் யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் மனை முகாமைத் துவம் , பொம்மை அச்சுப்பதித்தல் ஆகிய தொழிற்பயிற்சிகள் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

இப்பயிற்சிக்கு வரையறுக்கப்பட்ட மேலும் சில மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதனால் ,மிக விரைவில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறும் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறியவர்களும் பங்கேற்கலாம் என பாடசாலை அதிபர் எஸ்.இராமநாதன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தம்பசிட்டி அருள் மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இத்திருவிழா தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளதென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (3-10)

# 2010.02 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1822 - ஹெயிட்டி புதிதாக அமைக்கப்பட்ட டொமினிக்கன் குடியரசை முற்றுகையிட்டது.

★ 1885 - முதலாவது ஜப்பானியர் ஹவாய் தீவை வந்தடைந்தார்.

★ 1895 - வில்லியம் மோர்கன் volleyball ஐக் கண்டுபிடித்தார்.

★ 1897 - பெனின் மீது பிரித்தானியர் தாக்குதலை ஆரம்பித்தனர்.

★ 1900 - இலங்கையிலும், இந்தியாவிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

★ 1900 - டேவிஸ் கோப்பை டென்னிஸ் பந்தயம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1904 - போர்ட் ஆர்தர் சமர் ஆரம்பித்தது.

★ 1942 - ஐக்கிய அமெரிக்காவில் ப்கலொளி சேமிப்பு நேரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1962 - பொதுநலவாய அமைப்பினுள் ஜமெய்க்கா விடுதலை பெற்றது.

★ 1965 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்க தாக்குதல் படைப்பிரிவு முதற் தடவையாக தென் வியட்நாமிற்கு அனுப்பப்பட்டது.

★ 1969 - போயிங் 747 விமானத்தின் முதற் சோதனைப் பறப்பு மேற்கொள்ளப்பட்டது.

★ 1971 - கலிபோர்னியாவில் 6.4 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 1971 - அப்பல்லோ 14 விண்கலம் மூன்று அமெரிக்கர்களுடன் பூமி திரும்பியது.

★ 1975 - சோயூஸ் 17 விண்கலம் பூமி திரும்பியது.

★ 1986 - ஹேலியின் வால்மீன் சூரியனுக்கு அண்மையில் எட்டரைக் கோடி கி. மீ தூரத்தில் வந்தது.

★ 1991 - லித்துவேனியாவில் விடுதலைக்கு ஆதரவாக மக்கள் வாக்களித்தார்கள்.

★ 1996 - ஐரிஷ் குடியரசு இராணுவம் தனது 18 மாத யுத்த நிறுத்த உடன்பாட்டினை முறித்துக்கொண்ட சில மணி நேரத்தில் லண்டனில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

★ 1773 - வில்லியம் ஹென்றி ஹாரிசன், ஐக்கிய அமெரிக்காவின் 9ஆவது ஜனாதிபதி (இ.1841)

★ 1910 - ஜாக் மொனோட், நோபல் பரிசு பெற்றவர் (இ.1976)

★ 1940 - ஜே.எம்.கோட்ஸி, நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க எழுத்தாளர்

★ 1943 - ஜோசப் ஸ்டிக்லிட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர்.

★ 1970 - கிளென் மெக்ரா, அவுஸ்திரேலியத் துடுப்பாட்டக்காரர்

★ 1979 - சாங் சீயீ, சீனத் திரைப்பட நடிகை

## இறப்புகள்

★ 1881 - பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, ரஷ்ய நாவலாசிரியர் (பி.1821)

★ 1979 - டெனிஸ் காபோர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1900)

★ 1984 - யூரி அந்திரோபோவ், சோவியத் ஜனாதிபதி. (பி.1914)

★ 1994 - ஹவார்ட் டெமின், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1934)

★ 2001 - ஹேர்பேர்ட் சைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர் (பி.1916)

**1977 - ஜி.ஜி.பொன்னம்பலம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் (பி. 1901)**



சிந்திக்காதவன் முட்டாள்; சிந்திக்கத் துணியாதவன் கோழை; சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன். -டிரம்மண்ட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பியசேனவை விலக்கும் த.தே.கூவின் தீர்மானம் சட்டவிரோதமானது; நீதிமன்றம் தீர்ப்பு

(அம்பாறை)

தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பாக அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவான, நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனவை கட்சியின் உறுப்பினர் நிலையிலிருந்து விலக்குவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானம் சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அம்பாறை மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒரே நாடாளுமன்ற உறுப்பினரான பி.பியசேன தன்னை கட்சியிலிருந்து வெளியேற்றியமைக்கு எதிராக கடந்த டிசம்பர் மாதம் வழக்குத் தொடுத்திருந்தார். இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட ஹலின் மார்சூப் தலைமையிலான உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு நேற்றுக் காலை இத்தீர்ப்பை வழங்கியது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பி.பியசேன 18 ஆவது அரசியல்யாப்பு மாற்றம் தொடர்பான வாக்களிப்பின் போது அரசாங்கத்திற்கு ஆதரவாக வாகளித்திருந்தார். இதன்காரணமாக, தன்னை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் அடிப்படை உறுப்பினர் நிலையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்ததாக பி.பியசேன தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலக்கப்படுவதற்கு முன்னர், கட்சியினால் தனக்கெதிராக எவ்விதமான ஒழுக்காற்று விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பியசேன தனது மனுவில் கூறியிருந்தார்.

இந்தக் கருத்துக்களை பரிசீலித்த உயர் நீதிமன்றம் ஒழுக்காற்று நடவடிக்கையின்றி கட்சியிலிருந்து விலக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என அறிவித்துள்ளது.

இதன்படி பியசேனவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சியிலிருந்து விலக்குவது என எடுத்த தீர்மானம் சட்டவிரோதமானது எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை கருத்தில்கொண்டு கட்சி ஒன்று கூடி கலந்தாலோசித்து பியசேன குறித்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்த தீர்மானம் எடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (எ-5)

# மழையின் வடக்கு வீதிச் சமா யாழ்ப்பாணத்தில் நடக்கலாம்

கிழக்கில் ஆரம்பித்த மழை தெற்கு மேற்கு என எங்கும் கொட்டித் தள்ளி வடக்கு திசையில் திரும்பியுள்ளது.

முல்லைத்தீவிலும் வவுனியாவிலும் மன்னாரிலும் ஆரம்பித்துள்ள மழை வடக்கு வீதிக்கான சமாவை யாழ்ப்பாணத்தில் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டில் அடாத மழை பெய்யத் தொடங்கிய நாளில் இருந்து கதிரவன் யாழ்ப்பாணத்தில் மறைந்தே உள்ளான்.

மப்பு, மந்தாரம், குளிர் நிலை என மோசமான காலநிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

கூடவே இராட்சத திமிங்கிலம் ஒன்று பருத்தித்துறைக் கடலில் கரையொதுங்கிய சம்பவமும் நிகழ்ந்துள்ளது. எனினும் யாழ்.குடா நாட்டில் எதிர்வரும் நாட்களில் காலநிலை எவ்வாறு அமையும் என்று கூறமுடியாத அளவில் நிலைமை உள்ளது.

தெற்கிலும் கிழக்கிலும் கடும் மழை பொழிந்து கொட்டிய போது, யாழ்ப்பாணத்தை விட்டு வைத்த மழை, யாழ்.குடாநாட்டில் இரக்கம் காட்டிவிட்டதா? அல்லது எங்கள் ஆலயங்களில் தவில் நாதஸ்வர இசை முழங்க சுவாமி வீதி வலம் வரும் போது வடக்கு வீதியில் பெரும் சமா நடப்பது போல, யாழ்ப்பாணத்தை வடக்கு வீதியாக மழை கருதி சமா வைக்கத் தயாராகி விட்டதா? என்பது புரியாமல் உள்ளது.

சமா நடந்தால் என்ன? நடக்காமல் விட்டால் என்ன? மழை யாழ்.குடாநாட்டில் வடக்கு வீதிச் சமா வைக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும்.

கடும்மழை வெள்ளம் ஏற்பட்டால் தாழ்நிலங்களில் வசிக்கும் மக்கள் செல்லக்கூடிய பாதுகாப்பான இடங்களை இனங்கண்டு அதனை வெளிப்படுத்துதல்,

பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தயார்நிலையில் இருத்தல்.

உணவு , எரிபொருள் உள்ளிட்ட சகல பொருட்களும் தட்டுப்பாடின்றிக் கிடைக்கக்கூடியதாக அவற்றைக் களஞ்சியப்படுத்தல்.

மற்றும் யாழ்.குடாநாட்டில் நெல் அறுவடையைத் துரிதப்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்குதல்.

வெள்ளம் வழிந்தோடக் கூடியதாக வடிகால்களைச் செப்பனிடுதல். ஆகிய விடயங்களில் கவனம் எடுப்பதன் மூலம் யாழ்ப்பாணத்தை மழை வெள்ளம் தாக்கினாலும் அதன் பாதிப்பிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும்.

# பொதுநலவாய நாடாளுமன்றக் குழுவின் பிராந்திய மாநாடு கொழும்பில் நாளை

(கொழும்பு)

பொதுநலவாய நாடாளுமன்றக் குழுவின் ஆசியப் பிராந்திய மாநாடு நாளை கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது. 10ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 16ஆம் திகதி வரை கொழும்பு ஹில்ரன் ஹோட்டலில் நடைபெறவுள்ள இம் மாநாட்டினை பிரதமர் டி.எம்.ஜெயரட்ன ஆரம்பித்து வைக்கவுள்ளதாக தெரியவருகிறது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த தேசிய மற்றும் மாகாண நாடாளுமன்றங்களின் சபாநாயகர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இம் மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர். பங்குபற்றும் பிரதிநிதிகள் இப்பிராந்தியத்தில் பொதுவாகப்பாதிப்பினை விளைவிக்கும் வறுமைஒழிப்பு, பருவகால மாற்றங்கள் மற்றும் தாய், சேய் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாநாட்டில் பங்குபற்றும் விருந்தினர்கள் இலங்கையின் கண்டி மற்றும் சிகிரியா உள்ளிட்ட முக்கிய நகரங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர். இவர்களுக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பொதுநலவாய நாடாளுமன்றக் குழுவின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-5)

# "கலைக்காவலன் மெற்றாஸ் மயில்"



கலைகள் வளரப் பாடுபட்ட ஒரு தனிப் பெருங் கலைஞர் அமரர் மெற்றாஸ் மயில். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வான்புகழ் வள்ளுவனின் வாக்குக் கிணங்க கலையுலகில் தனக்கென ஓரிடம் பிடித்து எல்லோர் நெஞ்சங்களிலும் தெய்வ மாக வாழ்கின்றவர் கலைக்காவலன் மெற்றாஸ் மயில்.

## இன்று மெற்றாஸ் மயில் அவர்களின் ஓராண்டு நினைவு நாளாகும்

இவர் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டு கழகம் என்று ஒரு கழகத்தை நிறுவி தம்முடைய விடாமுயற்சியால் பல் வேறு கலைகளும் வளர்த்து பிரகாசிக்க ஆவன செய்தார். அது மட்டுமன்றி யாழ். மாவட்டத்தில் இலைமறை காயாக இருந்த கலைஞர்களை இனங்கண்டு அவர்களை வெளிக் கொணர்ந்து சமூகத்தில் தக்க மதிப்பளித்து கௌரவம் கொடுத்த பெருமையும் இவரையே சாரும்.

### மறைந்தார் மாண்பு

இவரது கலைத்திறனுக்கு "வேழம் படுத்த வீராங்கனை" நாடகம் ஒன்றே போதும். இது பல தடவைகள் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுக்களையும் வாழ்த் துக்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு நாடக நடிகராகவும் நாட்டுக் கூத்துக் கலைஞனாகவும் இசை நாடக எழுத்தாளராகவும் நாட்டார் இசைப்பாடகனாகவும் கிராமியக் கலை ஆடல் வல்லோனாகவும் கூத்து நாடகத் தயாரிப்பாளராகவும் அண்ணாவியாராகவும் விளங்கி கலை வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். கல்வித் திணைக்களத்தில் பதவி நிலை உத்தியோக த்தராகப் பணிபுரிந்த மெற்றாஸ் மயில் ஈழநாட்டின் பல பாகங்களிலும் கடமை யாற்றியுள்ளார். மேலும், வன்னி வள நாட்டார் பாடல்கள், இசை நாடகக்கூத்து, மூத்த கலைஞர் வரலாறு, ஆனையை அடக்கிய அரியாத்தை, மண் வாசனையில் மூன்று நாடகங்கள் முதலிய நூல்களை எழுதி வெளியிட்டு அரும் பணியாற்றியுள்ளார். 2001 ஆம் ஆண்டில் ஆளுநர் விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட் டார்.

எல்லாவற்றுக்கும் மேலாக பல்வேறு துறைசார்ந்த கலைஞர் பலருக்கு விழாவெடுத்து பாராட்டுப் பத்திரம் வழங்கினார். அத்துடன் பாரம் பரிய கலைகள் அழிந்து போய் விடக் கூடாது என்ற அரிய நோக் கில் ஒலி நாடா க்களையும் இறுவெட்டு க் களையும் வெளியிட்டு எல்லோரும் ரசிப்பதற்கு உதவினார்.

மெற்றாஸ் மயில் எல்லோரும் நேசிக் கும் ஒரு கலைஞன், எல்லோரையும் நேசிக் கும் ஒரு கலைஞன். மரபுவழி நாடகக் கலைகள், நாட்டுக் கூத்துகள், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், தீச்சிலம்படி, கோலாட்டம் என்று இன்னோரன்ன பல கலைகளும் துளிர் விட்டுப் பிரகாசித்து ஒளிவீச வேண்டுமென்று உண்மையாகவே பாடுபட்ட ஓர் உத்தம கலைஞனை இழந்தது கலையுலகுக்கு பேரிழப்பாகும்.

அரிய பல தமிழ் கலைகளை ஆர்வமுடன் வளர்த் தெடுத்துப்பாதுகாப்பதே நாம் அன்னாருக்குச் செய்யும் கைம்மாறாகும்.

சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



படைப்பு தொடக்கமும் முடிவும் இல்லாதது என்று வேதங்கள் போதிக்கின்றன. பிரபஞ்ச சக்தியின் மொத்த அளவு என்றும் ஒரே அளவில் தான் இருக்கிறதென்று விஞ்ஞானம் நிரூபித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் பிரபஞ்சத்தில் ஒன்றுமே இருந்திராத ஒரு காலம் இருந்திருக்குமானால் இப்போது காணப்படும் சக்தி அனை த்தும் எங்கிருந்தது? அது கடவுளி டம் ஒடுக்க நிலையில் இருந்தது என்று சிலர் கூறுகிறார்கள். அப்படி யானால் கடவுள் , சில காலம் ஒடுக்க நிலையிலும் சிலகாலம் இயக்க நிலையிலும் இருக்கிறார் என்றா கிறது. அதாவது, கடவுள் மாறக் கூடிய தன்மையர் . மாறக்கூடிய பொருள் கூட்டுப் பொருளாகத் தானிருக்க வேண்டும். எல்லா கூட்டுப் பொருள்களும் அழிவு என்னும் மாறுதலை அடைந்தே தீரவேண்டும். எனவே , கடவுள் இறந்து விடுவார் என்றாகிறது. இது அபத்தம் ஆகையால் படைப்பு இல்லாதிருந்த காலம் ஒருபோதும் இருந்ததில்லை.

## இல்லமெய்வல்லுநர் போட்டி

யாழ்.நடேஸ்வர கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு அதிபர் பொ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமான திருமதி க.சிவாஜி, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை அரிமாக்கழகம் ,முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் வி.விக்னராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-9)

# யாரை ஆதரிக்கிறோம் என்பதல்ல; யாரை தோற்கடிக்கிறோம் என்பதே முக்கியம்

## சீறும் சீமான்



யாரை ஆதரிக்கிறோம் என்பதல்ல... யாரைத் தோற்கடிக்கின்றோம் என்பதே முக்கியம். அந்த வகையில் காங்கிரஸை தோற்கடிக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சித்தலைவர் சீமான் தெரிவித்துள்ளார். சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் நாம் தமிழர் இயக்க கூட்டம் நடந்தது. இதில் சீமான் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையில்,

நாம் யாரை வெற்றிபெற வைக்கிறோம் என்பதை விட, இன்றைய சூழலில் யாரைத் தோற்கடிக்கச் செய்ய போகிறோம் என்பதே மிக மிக முக்கியம். இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் இறக்கக் காரணமாக இருந்தது காங்கிரஸ் கட்சி. படை, ஆயுதம் அரசியல் ஆதரவு என எல்லாவற்றையும் பிரயோகித்து தமிழர்களைக் கொன்றது காங்கிரஸ்.

தமிழ்நாட்டுத் தமிழன் செத்தால் கூடக் கண்டுகொள்ளாத, அப்போதும் இலங் கையை ஆதரிக்கிற ஒரே கட்சி காங்கிரஸ். பாராளுமன்றத்தில் தமிழக மீனவர்கள் இறந்தால் இந்தியன் இறந்துவிட்டார் எனக் கூறுகிறார்கள்.

தமிழன் இறந்துவிட்டதாக யாரும் கூறவில்லை. காங்கிரஸ் கட்சி கொமன் வெல்த் ஊழல், பீரங்கி ஊழல், 2ஜி ஸ்பெக்ட்ரம் போன்ற ஊழலில் சிக்கி திணறுகிறது. காங்கிரஸ் கட்சிதான் நமக்கு முதல் எதிரி.

காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க நாம் தமிழர் இயக்கத்தினர் வீடுவீடாகச் சென்று தேர்தலில் கை சின்னத்திற்கு வாக்களிக்கக் கூடாது என மக்களிடத்தில் தெளிவாகப் பிரசாரம் செய்ய வேண்டும். காங்கிரஸ் கட்சியை தேர்தலில் தோற்கடித்து விட்டு இதே இடத்தில் மீண்டும் வெற்றிக் கூட்டங்கள் நடத்துங்கள். தி.மு.க. தலைவர் கருணாநிதி கடந்த 5 ஆண்டுகளாக ஆட்சி செய்தும் முடியும் தறுவாயில் குடிசை வீடுகளை மாற்றி கொங்கிறீட் வீடுகள் கட்டித் தருவதாகக் கூறுகிறார்.

இந்தத் திட்டத்தை முன்பே செய்திருக்க வேண்டும். ஆட்சி முடியும் தறுவாயில் தற்சமயம் அறிவிக்கிறார். தி.மு.க. ஆட்சியில் தெருவில் நூலகங்கள் இல்லை. ஆனால் தெருக்கள் தோறும் பிராந்திக் கடைகள் (டாஸ்மாக்) உருவாக்கியுள்ளன.

வைகை ஆற்றில் தண்ணீர் இல்லை. ஆனால் 60 அடி ஆழத்திற்கு பொக்லைன் கொண்டு மணல் அள்ளுகிறார்கள். இவ்வாறு மணல் அள்ளுவதால் குடிநீர் திட்டமும் அடியோடு பாதிக்கிறது. மேலும் விவசாய விளை நிலங்களின் உற்பத்தியும் பாதிக்கிறது.

இந்தியாவில் ஒரு இலட்ச விவசாயிகள் பட்டினியால் இறக்கிறார்கள். ஆனால் மத்திய அரசின் உணவுக் கிடங்கில் உணவுப் பொருட்கள் மக்கி மக்களுக்கு பயன்படவில்லை என்றார்.

(ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி திணைக்களத்திற்கு வடமாகாண ஆளுநர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

கைதடியில் புதிதாக அமைக்கப்பட்ட வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் இயங்கும் திணைக்களங்களுக்கு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது, அங்கு இயங்கும் திணைக்களங்கள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டதுடன், அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

மேலும், இடப்பற்றாக்குறை காரணமாக ஏனைய அலுவலகங்களுடன் இணைந்து இயங்கும் திணைக்களங்களுக்கு மேலதிக இடவசதிகளை அமைத்துக் கொடுக்குமாறு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி.ரமேஷிற்கு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

(ஸ்ரீ-2)

# இலங்கை அதிகாரிகள் குழுவினர் தூத்துக்குடி துறைமுகத்தில் ஆய்வு

தூத்துக்குடி - கொழும்பு பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிப்பது குறித்த ஆய்வுக்காக இலங்கை அதிகாரிகள் குழுவினர் தூத்துக்குடி துறைமுகத்துக்கு சென்றடைந்துள்ளனர்.

இந்தப் பயணிகள் கப்பல் போக்குவரத்திற்காக இருநாடுகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின் இதற்கான பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன. தூத்துக்குடி துறைமுகத்தில் 2.25 கோடி ரூபாயில் பல்வேறு வசதிகளுடன் கூடிய பயணிகள் முனையம் திறக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தூத்துக்குடி துறைமுக தலைவர் சுப்பையா மற்றும் இந்திய அரசு அதிகாரிகள் கடந்த மாதம் கொழும்புக்கு வந்து கொழும்பு துறைமுகத்தில் பயணிகள் கப்பலை இயக்குவதற்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து ஆய்வு செய்தனர்.

அதன் தொடர்ச்சியாக இலங்கை துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சின் செயலர் ஜெய விக்ரம தலைமையில் இலங்கை அரச அதிகாரிகள் ஒன்பது பேர் நேற்று முன்தினம் தூத்துக்குடி துறைமுகம் சென்றடைந்தனர்.

கப்பல் போக்குவரத்திற்காக துறைமுகத்தில் மேம்படுத்தப்பட்டுள்ள பயணிகள் முனையம் அதிலுள்ள நவீன தொலைத் தொடர்பு வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்து துறைமுக தலைவர் சுப்பையா மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். இன்றும் அவர்கள் ஆய்வை தொடர்கின்றனர்.

ஆய்வை முடித்து இலங்கை அரசிடம் அறிக்கையை சமர்ப்பித்த பின் பயணிகள் கப்பல் போக்குவரத்து எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# தமிழர்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு மதிப்பளிக்கவில்லை

## வைகோ தெரிவிப்பு



(நாகபட்டினம்)

தமிழர்களின் உணர்வுகளை மத்திய ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு துளியும் மதிக்கவில்லை. அதனால்தான் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ குற்றஞ்சாட்டினார்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல்களைத் தடுக்காத மத்திய மாநில அரசுகளைக் கண்டித்து நாகையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

இப்போது இலங்கையில் சீனா தளம் அமைத்து வருகிறது. இந்தியாவுக்கு தெற்கிலிருந்து ஆபத்து காத்திருக்கிறது. இதனால் முதலில் பாதிக்கப்படுவது தமிழர்களாகத்தான் இருப்பார்கள்.

இந்தியாவின் பகை நாடுகளுக்கு இலங்கை அரசு வெளிப்படையாக ஆதரவு அளித்து வருகிறது.

வாஜ்பாய் அரசு ஈழத் தமிழர்களுக்குச் செய்த உதவிகளை மறக்க முடியாது. ஆனால், சோனியாகாந்தி தலைமையிலான மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு தமிழர்களின் உணர்வுகளை துளியும் மதிப்பதில்லை. அதனால்தான் தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தடுக்க இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் உள்ளிட்ட மத்திய அரசு அலுவலர்களும் தமிழக அரசு அலுவலர்களும் கடந்த ஜன. 28 ஆம் திகதி இலங்கைக்குச் சென்று இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வர் என ஒரு கடிதத்தில் பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இலங்கைக்குச் சென்ற அதிகாரிகள் குழுவில் தமிழக அரசு சார்பில் அதிகாரிகள் எவரும் பங்கேற்கவில்லை. மீனவர்கள் பிரச்சினைகள் முதல்வர் கருணாநிதி தீர்வுகாண விரும்பாததால்தான் அந்தக் குழுவில் தமிழக அதிகாரிகளை அனுப்பவில்லை என நான் குற்றம் சாட்டுகிறேன்.

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. அரசு அகற்றப்படும். அ.தி.மு.க தனித்து ஆட்சி அமைப்பது உறுதி. அப்போது தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீரும் என வைகோ கூறினார்.

(ஸ்ரீ-2)

# வெள்ள நிவாரணப் பணிகளில் முப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்புப்படையினர் வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 18 மாவட்டங்களில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெள்ளத்தால் உயிராபத்துக்களை எதிர்நோக்கியுள்ள மக்களைக் காப்பாற்றும் பணியில் பிரதேச அரசாங்க அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் விமானப்படையின் வான் ஊர்திகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன் உலர் உணவு மற்றும் சமைத்த உணவு ஆகியவற்றை பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்லவும் இந்த ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விமானப் படையினர் கடந்த 3ஆம் திகதியில் இருந்து இதுவரையில் 50 பேரின் உயிரைக் காப்பாற்றியுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகிக்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# உலகக்கிண்ண தொடருக்கு தென்னாபிரிக்க அணி தயார்

## அணித்தலைவர் சிமித் கருத்து

உலகக்கிண்ணத் தொடருக்கு தென்னாபிரிக்க அணி சிறப்பாக தயாராகி இருக்கிறது என்று அணித் தலைவர் சிமித் தெரிவித்துள்ளார்.

14 அணிகள் பங்கேற்கும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த தொடரில் பங்கேற்பதற்காக தென்னாபிரிக்க அணி நேற்று இந்தியாவுக்கு புறப்பட்டது.

இந்த நிலையில் தென்னா பிரிக்க அணித்தலைவர் சிமித் அளித்த பேட்டியில்,

கடந்த முறையை விட இந்த உலகக்கிண்ணத் தொடருக்கு தென்னாபிரிக்க அணி சிறப்பாக தயாராகி இருக்கிறது. 2007 உலகக் கிண்ண தொடரில் நாங்கள் சம்பியனாவோம் என்ற எதிர்பார்ப்பு நிலவியதால் எங்களுக்கு அளவுக்கு அதிகமாக நெருக்கடி ஏற்பட்டது. உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது எங்களது விருப்பமாகும். அதுதான் எங்கள் மனதில் உள்ளது. அப்படி இல்லாவிட்டால் போட்டிக்கு செல்வதில் அர்த்தம் இல்லையே?

### நெருக்கடி இல்லை

இந்தமுறை நாங்கள் கடந்த முறை போல் அல்லாமல் மிகவும் நெருக்கடி இல்லாமல் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறோம்.

படிப்படியாக முன்னேற முயற்சி செய்வோம். இறுதிப்போட்டிக்குள் நுழைய வேண் டும் என்பது எங்கள் இலக்காகும். கடந்த முறை நாங்கள் இறுக்கமான மனநிலையுடன் செயல்பட்டோம். ஆனால் இந்த முறை அது இருக்காது.

கடந்த முறை ஒரே மாதிரியான வீரர்கள் அதிகம் இருந்தோம். கடந்த முறையைவிட அனுபவம்வாய்ந்த வீரர்கள் குறைவு என்றாலும், இந்த முறை பல்வேறு விதமான திறமை கொண்ட வீரர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

சுழற்பந்து வீச்சில் கூட சிறந்த வீரர்கள் உள்ளனர். இதனால் வீரர்களை பயன்படுத்துவதில் நிறைய வாய்ப்புகள் இருக்கிறது.

கடந்த முறை ஒரே மாதிரியான ஆட்ட பாணியை கடைப்பிடித்தோம். ஆனால் இந்த முறை வித்தியாசமான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். பவர் பிளேயை சரியாக அடித்து விளையாட திட்டமிட்டு இருக்கிறோம்.

பந்துவீச்சாளர்கள் ஆக்ரோஷமாக செயல்பட்டு விக்கெட்டை வீழ்த்த முடிவு செய்துள்ளோம். இந்த முறை உலகக்கிண்ண தொடருக்கு மிகவும் சிறப்பாக தயாராகி இருக்கிறோம். இவ்வாறு சிமித் கூறியுள்ளார்.




# அவுஸ்திரேலிய இளம் வீரர்களுக்கு பயிற்சியளிக்க முரளிக்கு அழைப்பு

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்துவீச்சு நட்சத்திரமான முத்தையா முரளிதரன் அவுஸ்திரேலியாவின் எதிர்கால கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சியளிக்கவுள்ளார்.

பந்தை முறையற்ற விதமாக எறிவதாக ஒரு காலத்தில் அவுஸ்திரேலிய ரசிகர்களால் கூச்சலிடப்பட்ட முரளிதரன், பிரிஸ்பேனை தளமாகக்கொண்ட கிரிக்கெட் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் யூன்மாதம் அவுஸ்திரேலியாவின் இளம் சுழற்பந்துவீச்சாளர்களுக்கு பலவாரங்கள் பயிற்சியளிக்கவுள்ளதாக அவுஸ்திரேலியாவின் டெய்லி ரெலிகிராவ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய ஜாம்பவானான முத்தையா முரளிதரன், தனது சுழற்பந்து வீச்சு இரகசியங்களைக் கற்றுக்கொடுப்பதுடன் தனது பந்துவீச்சுப் பயிற்சி நெறியை பதிவு செய்து வைக்கவும் உள்ளார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவின் எதிர்காலத் தலைமுறை கிரிக்கெட் வீரர்களும் முரளிதரனிடமிருந்து கற்றுக் கொள்ள வாய்ப்புக்கிடைக்கும்.

# ஐந்தாவது உலகக்கிண்ண தொடர்

# பாகிஸ்தான் அணி சம்பியன்




ஐந்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் 1992ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி முதல் மார்ச் 25ஆம் திகதிவரை அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்றது.

இத் தொடரில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத்தீவுகள், சிம்பாவே ஆகிய அணிகள் மோதின.

இதில் முன்னைய உலகக்கிண்ண தொடர்களில் பங்கேற்கும் அணிகள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு மோதின.

ஆனால் இத் தொடரில் ரவுண்ட்–ரொபின் அடிப்படையில் மோதின. அதாவது ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளுடன் தலா ஒரு முறை மோதவேண்டும்.

இதில் லீக் சுற்று முடிவில் நியூசிலாந்து 14 புள்ளிகளுடனும் இங்கிலாந்து 11 புள்ளிகளுடனும் தென்னாபிரிக்கா 10, பாகிஸ்தான் 9 புள்ளிகளுடனும் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறின.

இதில் பாகிஸ்தான் அணி அரையிறுதிச் சுற்றை எட்ட மழை தான் கை கொடுத்தது.

இங்கிலாந்து அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் 74 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. தோல்வி உறுதி என்ற நிலையில் மழை பாகிஸ்தான் அணியைக் காப்பாற்றியது.

இப் போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டதனால் கிடைத்த ஒரு புள்ளிதான் பாகிஸ்தான் அணியை அரையிறுதிக்கு அழைத்துச் செல்ல துருப்புச் சீட்டாக அமைந்தது.

மழை வராமல் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தால் பாகிஸ்தான், அவுஸ்திரேலியா தலா 8 புள்ளிகளுடன் இருந்திருக்கும். ஓட்ட விகித சராசரியின் அடிப்படையில் அவுஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு நுழைந்திருக்கும்.

அரையிறுதி ஆட்டங்களில் பாகிஸ்தான் 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியையும் இங்கிலாந்து அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியையும் தோற்கடித்தன.

இந் நிலையில் பாகிஸ்தான்–இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கிளைமாக்ஸ் ஆட்டம் மெல்போர்னில் மார்ச் 25ஆம் திகதி நடைபெற்றது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு அணித்தலைவர் இம்ரான்கான் 72 ஓட்டங்களையும் ஜாவித் மியாண்டட் 58 ஓட்டங்களையும் இம்ஸமாம் உல்ஹக் 42, வசிம் அக்ரம் 33 ஓட்டங்களையும் எடுத்துக்கொடுத்தனர்.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியை அக்ரம், ஜாவீது, அகமெட் கூட்டணி மிரட்டியது.

பேர்பிரதர் 62 ஓட்டங்களை எடுத்ததைத் தவிர ஏனைய வீரர்களின் ஆட்டம் இங்கிலாந்து அணிக்கு ஏமாற்றம் அளித்தது.

இந் நிலையில் இங்கிலாந்து அணி 49.2 ஓவர்களில் 227 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் இப் போட்டியில் 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதன் முறையாக உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

துடுப்பாட்டத்தில் 33 ஓட்டங்களையும் பந்துவீச்சில் 3 விக்கெட்டுக்களையும் சாய்த்து அசத்திய பாகிஸ்தான் அணியின் சகல துறை வீரர் வசிம் அக்ரம் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் அதிக பட்சமாக மொத்தம் 456 ஓட்டங்களைக் குவித்த நியூசிலாந்தில் மார்டீன் குரோவ் தொடர் நாயகர் விருதைப் பெற்றார்.

### முதன் முறையாக...

இந்த உலகக்கிண்ணத் தொடரில் நிறைய மாற்றங்கள் செய்யப்பட்டன.

✷ முதன்முறையாக வீரர்கள் தங்கள் பெயர் பொறிக்கப்பட்ட வர்ண உடை அணிந்தனர்.

✷ முதன் முறையாக வெள்ளை நிறப்பந்து பயன்படுத்தப்பட்டது.

✷ பல ஆட்டங்கள் முதன்முறையாக மின்னொளியில் நடத்தப்பட்டது.

✷ முதல் 15 ஓவர்களில் 2 வீரர்களைத் தவிர மற்றவர்கள் குறிப்பிட்ட வட்டத்திற்குள் நிற்கும் புதிய கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

✷ சர்ச்சைக்குரிய இன ஒதுக்கீடு கொள்கையால் 1970ஆம் ஆண்டு முதல் கிரிக்கெட்டில் தடை செய்யப்பட்டிருந்த தென்னாபிரிக்காவுக்கு அந்த தடை விலக்கப்பட்டு முதன் முறையாக உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்றது.

✷ முதன்முறையாக தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது.

### சர்ச்சைக்குள்ளான மழை விதி

இந்த உலகக்கிண்ண தொடரில் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. மழை தான். எதிர்பார்த்தது போலவே 10 ஆட்டங்களில் மழையின் குறுக்கீடு இருந்தது. இதில் 2 ஆட்டம் கைவிடப்பட்டது.

முன்பு மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டால் ரன்–ரேட் அடிப்படையில் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணியின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் இத் தொடரில் ஓவரில் எடுக்கப்பட்ட சிறந்த ஓட்டங்கள் அடிப்படையில் புதிய மழை விதி கொண்டு வரப்பட்டது.




எனினும் இந்த விதி கடைசியில் கடும் சர்ச்சையில் முடிந்தது. தென்னாபிரிக்கா–இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியில்,

இங்கிலாந்து அணி 45 ஓவர்களில் நிர்ணயித்த 253 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு மழை எதிரியாக மாறியது.

கைவசம் 4 விக்கெட்டுக்கள் இருந்த நிலையில், தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு 13 பந்துகளில் 22 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது, மழை குறுக்கீடுசெய்தது.

12 நிமிடங்கள் பெய்த மழை தென்னாபிரிக்க அணியின் இறுதிப் போட்டி வாய்ப்பைத் தட்டிப் பறித்து விட்டது.

மழைகாரணமாக 2 ஓவர்கள் இழப்பு ஏற்பட்டதால், புதிய மழை விதிப்படி இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

அதாவது ஒரு பந்தில் தென்னாபிரிக்கா 21 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று மைதானத்தின் போட்டி விபரம் வெளியிடும் அறிவித்தல் பலகையில் காண்பிக்கப்பட்டது.

சாத்தியமே இல்லாத வகையில் திருத்தப்பட்ட இலக்கால் தென்னாபிரிக்க வீரர்கள் மட்டுமின்றி ரசிகர்களும் பெரும் அதிர்ச்சியடைந்தனர்.

இந் நிலையில் ஒரு பந்தில் ஒரு ஓட்டம் மட்டும் எடுக்கப்பட்டது. அன்று துரத்திய துரதிர்ஷ்டம் இன்னும் தென்னாபிக்க அணியை துரத்திக் கொண்டிருக்கிறது.

இந்த மழை விதிக்கு எதிர்ப்பு வந்ததால், அவ் விதி நீக்கப்பட்டு, அதன் பின்னர் கொண்டு வரப்பட்டதுதான் டக்வேர்த்–லூயிஸ் விதி அப்போது இந்த விதி இருந்திருந்தால் தென்னாபிரிக்க அணிக்கு ஒரு பந்தில் 5 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட் டிருக்கும்.

டக்வேர்த்–லூயிஸ் முறை 1996–97 ஆம் ஆண்டு முதல் முறையாக சர்வதேச கிரிக்கெட்டில் பயன்படுத்தப்பட்டது.



அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத் துறையினை மேம்படுத்தும் நோக்கில் ஸீ பிளேன் விமான சேவை நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து 06 அவுஸ்திரேலிய உல்லாசப் பிரயாணிகள் உட்பட 12 பேருடன் புறப்பட்ட ஸீ பிளேன் இலங்கையைச் சேர்ந்த 05பேருடனும் அம்பாறையிலுள்ள கொண்டவட்டுவான்வாவியில் தரையிறங்கியது. இவ் விமானத்தில் ஒரே நேரத்தில் 17பேர் பயணிக்க முடியும் என விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# போர்க்குற்றச்சாட்டு கரிசனை அற்பமான விடயங்கள் அல்ல

## அமெ.முன்னாள் தூதுவர் தெரிவிப்பு

தமிழீழத்திற்கான அமெரிக்க ஆதரவை நிராகரித்துள்ள இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் டெரேசிட்டா ஷாபெர், போர்க் குற்றச்சாட்டு குறித்த கரிசனைகள் அற்பமானவை அல்ல எனவும் கூறியுள்ளார். அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் கடைசிக் கட்டம் கொடுமையானதாக இருந்தமைக்கான ஆதாரங்கள் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தந்திரோபாய மற்றும் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தின் தெற்காசிய நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளராகவும் விளங்கும் டெரேசிட்டா ஷாபெர் இலங்கை அரசாங்கத்தினால் உண்மையான நல்லிணக்கம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

நேபாளம், இலங்கை மீதான முக்கியத்துவத்துடன் தெற்காசிய பிராந்தியத்தின் பாதுகாப்பு மீதான அமெரிக்கப் பார்வை எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க செயற்பாடுகளை நழுவவிட்டால் புதிய உள்நாட்டு மோதல் ஏற்படலாம். இலங்கைத் தலைவரை நல்லிணக்கத்திற்கு எவ்வாறு இசையச் செய்ய முடியும் என்பதில் தனக்கு தெளிவான அறிவு இல்லை எனவும்கூறினார். (ச-5)

## பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டே...

படுவதாகவும் புகைப்படங்கள் எடுக்கப்படுவதாகவும் வெளிவந்த செய்திகள் தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இணையத்தளம் ஒன்றிற்கு விளக்கம் அளிக்கையிலேயே இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போது அரச அதிபர் என்ற ரீதியில் என்னிடம் கேட்ட வேண்டிய அவசியம் படையினருக்குக் கிடையாது. அது பாதுகாப்பு அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ளப்டுகின்ற விடயம். அந்த வகையில்தான் யாழ்ப்பாணத்தில் பதிவுகள் மேற்கொள்வது தொடர்பாகவும் எனக்கு உத்தியோகபூர்வமான அறிவித்தல் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்ற குற்றச் செயல்களை தடுப்பதற்காகவே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை மட்டும் என்னால் உறுதிபடக் கூற முடியும். இந்த நடவடிக்கையை இட்டு பொதுமக்கள் கவலை கொள்ளத் தேவையில்லை என்று குறிப்பிட்டார்.

இதேவேளை இப் பதிவுகள் சம்பந்தமாக யாழ்.மாவட்ட இராணுவத் தலைமையகத்தினை தொடர்பு கொண்டு கேட்டபோது;

யாழில் தற்பொழுது கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதையிட்டு எமக்குப் பல்வேறு தரப்பினரும் முறைப்பாடு செய்திருந்தனர். வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களாலேயே மேற்படி குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்தனர். ஆகையினால் வெளி மாவட்டங்களிலிருந்து யார்யாரெல்லாம் யாழில் தங்கியிருக்கிறார்கள் என்பதை அறிவதற்கே இந்தப் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்கின்றோம். இது குற்றச் செயல்கள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் ஒரு நடவடிக்கையே ஒழிய மக்களை துன்பத்துக்கு உள்ளாக்கும் நோக்கம் எதுவும் எமக்குக் கிடையாது.

தற்சமயம் இரவு வேளைகளில் அதிகளவிலான படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களை மீறி எந்தவித தீய செயலும் யாழில் நடைபெறாது. அமைதியாக இருக்கின்ற யாழில் இதுபோன்ற சேறு பூசும் தீய செயல்களில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதே எங்களுடைய தலையாய கடமையாகும் என அதில் மேலும் கூறப்பட்டுள்ளது. (எ-1)

## மக்கள் பதிவு நடவ...

நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா எழுதிய கடிதத்தில் மேற்படி குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்திருந்தார்.

இக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றவை என இராணுவப் பேச்சாளர் உபய மெதவல கூறியுள்ளார். பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் படி ஒவ்வொரு பிரஜையும் பதிவு செய்து கொள்வது அவசியமாகும். யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அல்ல கம்பஹா போன்ற இடங்களிலும் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. விரைவில் இலத்திரனியல் முறையிலான அடையாளம் காணல் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன.

இராணுவம் எதற்காக யாழ்.நகரில் பொது இடங்களில் குடும்பப் புகைப் படங்களை பிடிப்பதற்கு பணம் வசூலிக்க வேண்டும்? இத்தகைய குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. நாம் இவற்றை முற்றாக நிராகரிக்கின்றோம் என மேஜர் ஜெனரல் உபய மெதவல கூறினார். (ச-5)


சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது

SONY make.believe

மலிவு விற்பனை

யப்பானில் தயாரிக்கப்பட்டவை

| SONY TV | PANASONIC | Audio Amp | BOX |
|---|---|---|---|
| Wega | 14 | 500W | 500W |
| P1 | 21 | 200W | 200W |
| J1 | 29 | 150W | 100W |
| 2184 | | | |

(3670)

விபரங்களுக்கு

NATIONAL ELECTRONIC
372,மணிக்கூட்டுவீதி (பெருமாள்கோவில் வீதி), யாழ்ப்பாணம்.
T.P: 021 222 64 34

NEW ASIAN CENTER
56/15B, ஸ்ரான்லிவீதி (சம்பத் வங்கி அருகாமை), யாழ்ப்பாணம்.
T.P: 071 85 65 654

நீங்கள் கொள்வனவு செய்யும் பொருட்கள் உங்கள் வீடுகளிற்கு இலவசமாகக் கொண்டுவந்து தரப்படும்.


# செய்ம்மதி மூலமாக சாட்சியமளிப்பு குறித்து எதுவும் தெரியாது என்கிறது ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் நல்லிணக்க ஆணைக்குழு செய்ம்மதி மூலமாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவிடம் சாட்சியங்களைத் திரட்டவுள்ளது என்று வெளியான தகவல் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என ஆணைக் குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்குழுவிடம் தாம் செய்ம்மதி மூலம் சாட்சியங்களை திரட்டவுள்ளோம் என்பது தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது.

சாட்சியங்களைப் பெறுவதற்காக ஆணைக்குழு நியூயோர்க் செல்லும் நோக்கமில்லை. அதேநேரம் நிபுணர்குழுவினர் வேண்டுமானால் இலங்கைக்கு விஜயம் செய்து ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவோ விசாரணைகளை மேற்கொள்ளவோ முடியும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழு தற்போது பொது அமர்வுகளை நிறுத்தியுள்ளதாகவும் இதுவரை கிடைக்கப்பெற்ற சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. நிபுணர்குழு இலங்கைக்கு எந்த விஜயத்தையும் மேற்கொள்ளாது செய்ம்மதி மூலம் விசாரணைகளை மேற்கொள்ள யோசனை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## இலங்கை மீது...

புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலி ஆதரவு தமிழ்ப் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் கடும்போக்குடைய அமைப்புக்கள் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருகின்றன.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதற்காக புலம்பெயர் தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளின் உதவியைக் கோரியுள்ளனர். இறுதித் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதற்காக அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-5)

## வேட்பு மனு...

தொடர்பிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அக்மீமன மற்றும் உக்குவளை தொடர்பிலும் லங்கா சம சமாயக் கட்சி குச்சவெளிப் பிரதேச சபை தொடர்பிலும் ஒரு சுயேட்சைக்குழு ஹிங்குரான்கொட பிரதேச சபை தொடர்பிலும் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். (ச-5)

## தமது ஆசன...

வாங்கிக் கொண்டதாக தெரியவில்லை.

அதனையடுத்து சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கடும்தொனியில் அதட்டியபோது பதறியடித்துக் கொண்டு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தத்தம் ஆசனங்களுக்குச் சென்றுமர்ந்து கொண்டனர். இனி மேல் தத்தம் ஆசனங்களில் அமர்ந்திருக்குமாறு சபாநாயகர் அவர்கள் அனைவருக்கும் கடும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ந-5)

## பொன்சேகாவை விடுதலை...

பேதமின்றி நாம் எல்லோரும் இங்கு கூடியுள்ளோம்.

சரத் பொன்சேகாவை மாத்திரம் தனியான ஒரு சிறைக் கைதியாகப் பார்க்கவில்லை. சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் ஒன்று சேர்த்து அவர்களையும் விடுதலை செய்வதற்காக இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒன்று கூடியுள்ளோம். யுத்தம் நடந்ததற்கான காரணிகளை ஆராய்ந்து அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் தவறியுள்ளது.

நாட்டின் ஜனநாயகத் தன்மையை பெற்றுக்கொடுப்பதற்கும் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காகவும் ஜனநாயக மக்கள் முன்னணி இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளது என்றார்.

இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், ஹந்துன்நெத்தி, அர்ஜுன ரணதுங்க, டிரான் அலஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட பலர் இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## யாழ்.குடாநாட்டில் பொருட்...

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளால் அண்மையில் அறிவிக்கப்பட்ட வர்த்தமானியின் விலைக் கட்டுப்பாடு ஏற்க முடியாதது. அவர்களின் விலைக் கட்டுப்பாட்டிற்கு உகந்ததாக அரிசி கொள்முதல் செய்து தரப்படுமாயின் அந்தக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு விற்பனை செய்யத் தயாராகவுள்ளோம்.

கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் கொழும்பு விலையிலும் குறைவாக இங்கு விற்கப்படுகின்றது.

குறிப்பாக பால்மாப் பெட்டிகள் கொழும்பு விலையிலும் குறைவாக விற்கப்படுகின்றமைகுறிப்பிடத்தக்கது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்துள்ள நிலையிலும் அவற்றை விடக் குறைவாக யாழ்.வர்த்தகர்கள் பொருட்களை விற்று வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட இந்த அழிவுகள் காரணமாக குடாநாட்டில் பொருட்களின் விலை அதிகரிக்காது, இருப்பில் உள்ளவரை நியாயமான விலைக்கே பொருட்கள் விற்கப்படும்.

போக்குவரத்து சீரான முறையில் உள்ளதால் பொருட்கள் போதிய ளவு இறக்குமதி செய்யப்படுகின்றது. இதனால் மக்கள் பொருட்கள் விலையேறும் என அச்சப்படத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# IDD கட்டணம் சதங்களில்



airtel

வடக்கைச் சேர்ந்த உங்களுக்காக
**airtel** இடமிருந்து
விசேட **IDD** கட்டணங்கள்

| நிமிடத்திற்கான கட்டணம் | செக்கனுக்கான கட்டணம் நிலையான தொலைபேசி | செக்கனுக்கான கட்டணம் கையடக்கத் தொலைபேசி |
|---|---|---|
| அமெரிக்கா/ கனடா | 03 சதம் | 03 சதம் |
| இந்தியா | 03 சதம் | 03 சதம் |
| அவுஸ்திரேலியா | 03 சதம் | 24 சதம் |
| இங்கிலாந்து | 03 சதம் | 24 சதம் |
| சைப்பிரஸ் | 05 சதம் | 09 சதம் |
| மலேசியா | 05 சதம் | 05 சதம் |
| சுவீடன் | 05 சதம் | 24 சதம் |
| ஜேர்மனி | 05 சதம் | 24 சதம் |
| பிரான்ஸ் | 05 சதம் | 24 சதம் |
| இத்தாலி | 05 சதம் | 30 சதம் |
| சுவிற்சர்லாந்து | 05 சதம் | 42 சதம் |
| ஜோர்தான் | 17 சதம் | 17 சதம் |
| சவுதி அரேபியா | 17 சதம் | 24 சதம் |
| லெபனான் | 17 சதம் | 32 சதம் |
| குவைத் | 24 சதம் | 24 சதம் |
| ஐக்கிய அரபு இராச்சியம் | 24 சதம் | 24 சதம் |
| கட்டார் | 30 சதம் | 30 சதம் |
| நோர்வே | 30 சதம் | 30 சதம் |

மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு வரி உள்ளடக்கப்படும்.

www.jwt.lk





## உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழக பட்டப்படிப்பை யாழ் மண்ணிலேயே பெற்றுக்கொள்ள இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்..!

ஆம்.. ஐக்கிய இராஜ்ஜியம், அவுஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகளின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களின் முழுமையான பட்டப்படிப்பை யாழ்மண்ணிலேயே குறைந்த செலவில், ஆனால் அதே சர்வதேச அங்கீகாரத்துடன் (UCG அங்கீகாரம்) பெற்றுக்கொள்ளலாம்.

நெகிழ்வு தன்மைவாய்ந்த கற்கைநெறி முழுமையாக இங்கேயே மேற்கொள்ளலாம், அல்லது 2+2 முறைமையின் கீழ் 2 வருடங்கள் சினேக் யாழ் வளாகத்திலும் மிகுதி 2 வருடங்கள் குறிப்பிட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்ளலாம்.



பொறியியல்துறை (Engineering)



முகாமைத்துவம் (Management)

- குறைந்த, இலகு தவணை கட்டணங்கள்.
- உலகத்தரம் வாய்ந்த வசதிகள்.
- தரம் வாய்ந்த விரிவுரையாளர் குழாம்.
- உள்ளக பட்டப்படிப்பின் அங்கீகாரம்.



தகவல் தொழில்நுட்பமும் கணனி கற்கையும் (IT & Computing)

KKS Road, Maruthanamadam, Jaffna District.
Tel: 021 4 925 925 Gen. Hotline: 011 4 486 486
E-mail: infojaffna@cinec.edu

**CINEC Jaffna Campus**
BRANCH OF CINEC MARITIME CAMPUS

வாழ்வில் கிடைக்கப்பெறாத அரிய வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

World Class Excellence In Education and Training www.cinec.edu

ADInnovations

# வெள்ளம், மண்சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடி நிவாரணத்திற்காக 500 மில்.ஒதுக்கீடு

(கொழும்பு)

வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்காக 500 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒதுக்கியுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீரவின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி நிதியமைச்சர் என்ற வகையில் இந்நிதியொதுக்கீட்டை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை, வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்காக நேற்று முன்தினம் காலையில் மட்டும் முப்பது மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அமைச்சர் அமர வீர குறிப்பிட்டார்.

இதன்மூலம் வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவு மற்றும் உலர் உணவு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த 3 ஆம்திகதி முதல் ஏற்பட்ட இவ் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குச் சமைத்த உணவு மற்றும் உலர்உணவு நிவாரணம் வழங்கவென 125.5 மில்லியன் ரூபா ஏற்கனவே அனுப்பிவைக் கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## பளை பிரதேச சபை கட்டடம் புனரமைப்பு

(பருத்தித்துறை)


பளைப்பிரதேச சபை மேல்மாடிக் கட்டடம் 6 மில்லியன் ரூபா செலவில் நிகொட் நிறுவனத்தால் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேச சபையின் மேல் மாடிக் கட்டடம் யுத்த நடவடிக்கையினால் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-10)

## சேதமுற்ற 10000 வீடுகளை மீளமைக்க அரசு தீர்மானம்

### அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்றவற்றால் சேதமுற்ற 10 ஆயிரம் வீடுகளை மீளமைத்துக் கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் விமல்வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

அதன்படி குறிப்பிட்ட வீடுகளை மீள நிர்மாணித்துக் கொடுப்பதற்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இயற்கை அனர்த்தங்களால் 10 மாவட்டங்களில் ஆயிரத்து 161 வீடுகள் முற்றாகவும் 8 ஆயிரத்து 12 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன.

மேற்படி விடயமாக அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, அநுராதபுரம், பொலநறுவை, நுவரெலியா, மாத்தளை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல வீடமைப்பு மாவட்ட முகாமையாளர்களும் இப்பகுதிகளிலும் சேவையாற்றும் 120 வீடமைப்பு அலுவலர்களும் உடனடியாகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபா பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ஒதுக்கப்படுகின்றது.

மேலதிக நிதியை திறைசேரி மூலம் பெற்று பாதிக்கப்பட்ட வீடுகளை உடனடியாக நிர்மாணிக்க வீடமைப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுமாறு பணிப்புரை

தேர்தல் அபேட்சகர்களின் விருப்பு இலக்க சுவரொட்டிகளை அகற்றுமாறு தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவோர் தமது வீடுகள் , கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் தலைமை அலுவலகம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் சுவரொட்டிகள் கட்டவுட் அல்லது விருப்புவாக்கு இலக்கத்தைக் காட்சிப்படுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

அபேட்சகர்கள் தமது வீட்டில் மாத்திரம் விருப்புவாக்கு இலக்கம் அடங்கிய சுவரொட்டிகள், கட்டவுட், பதாதை என்பவற்றினைக் காட்சிப்படுத்த முடியுமெனவும் அதற்கு வெளியே எந்த இடத்திலும் அவ்வாறு விருப்பு வாக்கு இலக்கங்களைக் காட்சிப் படுத்த முடியாதென உள்ளூராட்சி நிறுவனங்ளுக்கான தேர்தல் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவுகள்

(கொழும்பு)

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ள விளையாட்டரங்குகளை உள்ளடக்கிய பிரதேசங்களான கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் மீண்டும் பொலிஸ் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாளிகாவத்தை கெத்தாராம பகுதிகளுக்கு நேற்று முன்தினமும் நேற்றும் வருகை தந்த இராணுவத்தினர் பதிவு விண்ணப்பங்களைக் கொடுத்து குடும்ப விபரங்களை பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இலங்கையில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான பாதுகாப்பின் நிமித்தமே இவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது. (ஸ்ரீ-2)

## குளிருடன் கூடிய காலநிலை ஏப்ரல் வரை நீடிக்கும்

### வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

உலக காலநிலை மாற்றங்கள் காரணமாக நாட்டில் முற்றிலும் வெயிலான காலநிலை ஏற்படுவதற்கு சில மாத காலம் செல்லும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்போதைய லா நினா காலநிலையானது எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதி அல்லது மே முற்பகுதி வரை நீடிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் எஸ். எச். காரியவசம் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

எதிர்வரும் நாட்களில் மழை வீழ்ச்சி குறையும் என எதிர்பார்க்கலாம் என்றும் இருந்த போதிலும் முற்றாக வெயிலான காலநிலையை எதிர்பார்க்க முடியாது எனவும் கூறியுள்ளார்.

நாட்டின் வானிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் தாழமுக்கம் இன்னும் சில நாட்களுக்கு நீடிக்கும் என தெரிவித்துள்ள அவர் காற்றின் காரணமாக வெப்பநிலையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கரையோர ரயில் பாதைகளை நவீனமயப்படுத்தும் நடவடிக்கை

(கொழும்பு)

கரையோர ரயில் பாதைகளை நவீனமயப்படுத்தப்படும் முதற்கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. காலி, மாத்தறை ரயில் வீதி முதற்கட்டமாக புனரமைக்கப்பட்டுள்ளதோடு இதன் போக்குவரத்து நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இதனை முன்னிட்டு காலி ரயில் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மத நிகழ்வில் அமைச்சர் குமாரவெல்கம, பிரதி அமைச்சர் றோகன திஸாநாயக்க, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-9)



காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கல்லூரியின் பழைய மாணவனும் நல்லூர் உதவி பிரதேச செயலருமான அ.சோதிநாதன் மங்கல விளக்கேற்றுவதனையும் கல்லூரியின் அதிபர் அ.சோமசேகரம் தலைமையுரையாற்றுவதனையும் திறமையான மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி சோதிநாதன் வழங்குவதனையும் மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள் :-காரைநகர் செய்தியாளர்)